# நூலகவியல்

காலாண்டுச் சஞ்சிகை டிசம்பர், 1986

## இந்த இதழில்.....

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சண்முகதாஸ், மனோண்மணி — யாழ்ப்பாணத்தில் நூலக வளர்ச்சி | ... 1 |
| 2. | செல்வராஜா, என். — கிராம நூலக இயக்கம் – அறிமுகம் | ... 6 |
| 3. | பாலசுந்தரம், விமலா. — மத்தியமயமாக்கப்பட்ட பட்டியலாக்கம் | ... 12 |
| 4. | முருகவேள், சி. — எழுத்துக்கலையும் சாதனங்களும் | ... 19 |
| 5. | ஜெயராஜா, சபா. — கலைத்திட்ட அபிவிருத்தியும் பாடசாலை நூலகங்களும் III | ... 21 |

பதிப்பாசிரியர் : என். செல்வராஜா மலர் 2, இதழ் 2

நூலகவியல் — காலாண்டு வெளியீடு

மலர் : 2 — இதழ் : 2 - டிசம்பர், 1986

பதிப்பாசிரியர் : திரு. என். செல்வராஜா

ஆசிரியர் குழு :
திரு. சி. முருகவேள்
B.A. (Hons), Post. Grad. Dip. in Lib. (Lond.)
திரு. வே. இ. பாக்கியநாதன்
B.A., M.Sc. (Lib. Sc.)
கலாநிதி. இ. பாலசுந்தரம்
B.A., Ph. D.
திருமதி. ரோ. பரராஜசிங்கம்
B.Sc., M.L.I.S. (Madras)
திருமதி. ரூ. நடராஜா
B.A., A.L.A. (Sri Lanka)

வெளியீடு : அயோத்தி நூலக சேவைகள்
ஆனைக்கோட்டை

சந்தா : தனிப்பிரதி ரூபா 7/50;
ஆண்டுச் சந்தா ரூபா 30/-

* * * * *

வீடு தோறுங் கலையின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ள ஊர்கள்
நகர்களெங்கும் பல பல பள்ளி
தேடு கல்வியிலாத தொருரை
தீயினுக் கிரையாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை
கேண்மை கொள்ள வழியிவை கண்டீர்

— பாரதியார் —

NOOLAHAVIYAL
A Quarterly Publication.
Publishers: Ayothy Library Services, Anaicoddai, N.P.
General Editor: N. Selvarajah.
Price: Rupees 7.50, Annual Subscription: Rupees 30.00
Correspondence with publishers.
Cheques in favour of N. Selvarajah, Ayothy Library Services.

## நுழைவாயில்

கடந்த சில காலமாகத் தமிழ்ப் பகுதிகளெங்கும் பிரதேச அபிவிருத்தி முயற்சிகள் தொடர்பான கருத்தரங்குகளும், கண்காட்சிகளும் புதியவொரு உத்வேகத்துடன் நடைபெற்று வருகின்றன. நாட்டின் பொருளாதார, சமூக அபிவிருத்தி நூலகங்களின் பங்களிப்பும் இத்தகைய கருத்தரங்குகள், கண்காட்சிகள் போன்று அவசியமானதாகும். அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் நவீன மயப்படுத்தப்பட்ட தொழில் நுட்ப அறிவியலைத் தேடிப் பெற்று வழங்குவதில் நூலகங்கள் ஆர்வம் காட்ட வேண்டியதாகவுள்ளது.

எமது பிரதேசங்களில் பல்வேறு தொழில்நுட்ப நிறுவனங்கள் தனிப்பட்ட முறையில் ஆய்வுகளை மேற்கொண்டும், அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டும் வருகின்றன. இவை தமக்கென சிறியதும் பெரியதுமான நூலகங்களையும் கொண்டுள்ளன. இந்நூலகங்கள் தமது அங்கத்தினர் மட்டத்தில் பெரும்பாலும் தமது சேவையை ஆற்றி வருகின்றன. இத்தகைய நூலகங்களுக்கிடையே தொடர்புகளை ஏற்படுத்தி ஒரு கூட்டுறவு முறையில் இயங்கச் செய்து அவற்றுக்கிடையே தகவல் பரிமாற்றம் செய்து கொள்ள வழியமைக்க வேண்டியது இன்றைய தேவைகளின் ஒன்றாகும்.

தொழில்நுட்பத்துறை சார்ந்த நூல்கள் விலை உயர்வானவை. உலகெங்கிலுமிருந்து நாள் தோறும் தொழில் நுட்பத் துறையின் நவீன தகவல்கள் நூலுருவில் வெளி வந்த வண்ணமுள்ளன. இவை அனைத்தையும் கொள்வனவு செய்யக் கூடிய சக்தி எமது நூலகங்களுக்கு இல்லை.

எனவே தொழில்நுட்ப நிறுவனங்களுக்கிடையே அமையும் கூட்டுறவின் மூலம் ஒவ்வொரு நிறுவனமும் நூல் கொள்வனவில் ஒரு பொதுக் கொள்கையினை வகுத்து அதனடிப்படையில் சிக்கன முறையில் தத்தம் கொள்வனவை மேற்கொள்ளலாம். நூலகங்கள் தாம் சேகரித்து வைத்திருக்கும் நூல்களின் பட்டியலைப் பல்வேறு நிறுவன நூலகங்களுக்கும் அனுப்பி வைப்பதன் மூலம் தம் சேவையை விரிவுபடுத்தலாம். தொழில்நுட்ப சஞ்சிகைகள் கொள்வனவு செய்வதிலும் இத்தகையதொரு கூட்டுறவு முறையைப் பின்பற்றுவதன் மூலம் நிதி விரயத்தைத் தவிர்க்கலாம்.

தொழில்நுட்பத்துறை சார்ந்த நிறுவனங்களினதும், நூலகங்களினதும் கூட்டுறவு வளர்வதற்கு இதுவே தக்க தருணமாகும்.

21.11.1986 — பதிப்பாசிரியர் -

# யாழ்ப்பாணத்தில் நூலக வளர்ச்சி.
*************************

மனோன்மணி சண்முகதாஸ்

(இக்கட்டுரையானது இலங்கைப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாண வளாகத்தில் 19.5.1976 அன்று நடைபெற்ற தென்னாசியவியல் கருத்தரங்கில் வாசிக்கப்பட்டது).

ஒரு நாட்டின் அறிவின் விருத்திக்குப் பல்வேறு அம்சங்கள் உதவி புரிகின்றன. அவற்றுள் முக்கியமாக கல்விச்சாலைகளையும் நூலகங்களையும் குறிப்பிடலாம். மனிதனை அறிவிலே விருத்தி செய்வதற்கு இந்த இரண்டும் முக்கியமானவையாகும். குழந்தைப் பருவம் முதல் அவன் வளர்ந்த மனிதனாக உருவாகும் வரை கல்விக் கழகங்கள் அவனுக்கு அறிவினை ஊட்டுகின்றன. ஆனால் நூலகங்களோ அவன் இறக்கும் வரை அவனது அறிவுப் பெருக்கத்திற்கு உதவி நிற்கின்றன. கல்விகற்ற மனிதன் அதனை மேலும் பெருக்கிக்கொள்ள நூலகங்களை நாடிச் செல்கிறான். அதுமட்டுமன்றி தான் கற்காத புதுவிடயங்களைப் பற்றிய அறிவினையும் அவனால் அங்கு பெற முடிகின்றது. இதனால் மனித சமுதாய வளர்ச்சியில், நூலகங்களின் பங்கும் முக்கியமானதொன்று என்று கருதப்பட்டு வருகின்றது.

அத்தகைய நூலகங்களின் வளர்ச்சியானது யாழ்ப்பாணக் குடாநாட்டிலே எவ்வாறு வந்தமைந்ததென்பதனை ஆராயமுற்படுவது இக்கட்டுரையின் நோக்கமாகும். இத்தகையதொரு ஆய்வின் முதல் முயற்சி இதுவேயாக அமைவதால் இது பூரணமானதாக அமையாவிடினும் ஓரளவு நூலகங்களின் வளர்ச்சி யாழ்ப்பாணத்தில் எவ்வாறு அமையலாம் என்பதை கோடிட்டுக்காட்டுவதாகவே அமையும்.

கல்வி வளர்ச்சியும் நூலகத்தின் தோற்றமும் ஒன்றோடொன்று பிணைந்தவையாக இருப்பதனால் யாழ்ப்பாணத்தின் நூலக வளர்ச்சியை நாம் ஆராய்வதற்கு யாழ்ப்பாணக் குடாநாட்டினது கல்வி வளர்ச்சியையும் பற்றி ஆராய வேண்டுவது அவசியமாகின்றது. அந்நியரது ஆட்சி இங்கு ஏற்படுவதற்கு முன்பே கல்வி வளம் பெற்றிருந்தது என்பதற்கு வரலாற்றுச் சான்றுகளும் உள்ளன. அதிலும் குறிப்பாக 13ம் 14ம் நூற்றாண்டுகளில் ஆரியச் சக்கரவர்த்திகளது காலங்களில் இக்கல்வி வளர்ச்சி உச்சநிலை அடைந்திருந்ததெனக் கூறலாம். இதற்குப் போதிய வரலாற்றுச் சான்றுகளும் உள்ளன. இதனால் இக்காலத்திற்கு முற்பட்ட காலப்பகுதிகளில் கல்வி வளர்ச்சியும் நூலகங்களின் வளர்ச்சியும் இருந்தனவா என்பதை அறிவதற்கு போதிய சான்றுகளின்மையால் இக்கட்டுரையில் 13ம் நூற்றாண்டுகளுக்குப் பிற்பட்ட காலங்களின் நூலக வளர்ச்சியினையே ஆராய முற்பட்டுள்ளேன்.

## ஆரியச் சக்கரவர்த்திகள் காலம்:

முதன் முதலாக ஆரியச் சக்கரவர்த்திகளது காலத்திலே சரஸ்வதி மகால் என்ற நூல் நிலையம் ஒன்று இருந்ததாக அறியப்படுகின்றது. இதுவே யாழ்ப்பாணக் குடாநாட்டின் நூல் நிலைய வரலாற்றில் நாம் அறிகின்ற முதல் முதல் நூலகம் பற்றிய செய்தியாகவும் இருக்கின்றது.

இச்செய்தி பற்றி பல்வேறு சான்றுகளும் இருப்பதனால் இதனை உறுதிப்படுத்தக் கூடியதாகவும் இருக்கின்றது. வித்துவான் சி. கணேசையர் அவர்கள் எழுதிய ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரம் என்னும் நூலில் "சோழராஜனால் அனுப்பப்பட்ட அவன் புதல்வன் ஒருவன் சிங்கையாரியச் சக்கரவர்த்தி என்னும் பெயரோடு முடிசூட்டப்பெற்று அரசாண்டான். அவன் தன் ராசதானியாகிய நல்லூரிலே தன் நாட்டிலும் பிறநாட்டிலும் இருந்த பண்டிதர்களை அழைப்பி வைத்து ஒரு தமிழ்ச் சங்கம் தாபித்து அதற்கு சர்வமானியமாக ஒரு கிராமத்து வயல்நிலங்களையும் விடுத்தான். அக்கிராமம் இப்போது சங்குவேலி என்னும் பெயரோடு விளங்குகின்றது. அச்சங்கப்புலவர்கள் செய்த நூல்கள் யாவும் அதனால் அமைக்கப்பட்ட "சரஸ்வதி மகாலயம்" எனப் பெயரமைந்த புத்தகாலயத்தில் வைக்கப்பட்டிருந்ததென்றும் அது சிங்கள அரசன் ஒருவனால் தீக் கொளுத்தப்பட்டு அழிந்ததென்றும் சரிதநூல் கூறும். அதனால்போலும் அவர்கள் செய்த நூல்களாயினும் தனிச் செய்யுள்களாயினும் எமக்குக் கிடைத்தில[1]". இவ்வாறு கூறிச் சென்றுள்ளார். இச்செய்தியினை வரலாற்று ரீதியாக ஆராயும்போது இதனை ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரம் என்னும் நூலும் நிறுவி நிற்கின்றது.

"சிங்கை ஆரியச் சக்கரவர்த்தி தனது நாடும் அரசும் காப்புக்குறைவு சிறிதுமில்லாதிருக்குமாறு வேண்டியவையெல்லாம் வகுத்தான். அதன் மேல் தானியத்தால் தனது நாடு முட்டுறுவண்ணம் புதிதாக அநேக விளைபொருட்களையும் குளம் பாய் வடிகால்களையும் அமைத்தான். தமிழை வளர்க்கவும் அது வாயிலாகத் தனது நாட்டிலே கலை வளர்க்கவும் ஒரு தமிழ்ச் சங்கமும் அமைத்தான். அச்சங்கத்தாருக்கு மானியமாகச் சங்குவேலி என்னும் கிராமமும் சங்கத்தார் வயலும் அவனால் விடப்பட்டன."[2] இதற்கு ஆதாரமான சமகாலச் சான்றுகள் இல்லை.

எனினும் தொடர்பாக இந்நூல்நிலையத்தினைப் பற்றிய செய்திகளை அறிய முடியவில்லை. அதன் தன்மை பற்றியோ அன்றேல் அமைப்புப் பற்றியோ எவ்வித தகவல்களையும் பெற முடியாமல் இருக்கின்றது. கையெழுத்துப் பிரதிகள் பல அங்கு சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தன என்ற குறிப்பு மட்டுமே எமக்குக் கிடைக்கின்றது. அவ்வாறு சேகரிக்கப்பட்டு வைத்திருந்த பிரதிகளை யார் வாசித்தார்கள்? அவற்றை வாசிப்பதற்கு யாருக்கு உரிமை இருந்தன என்பன போன்ற விடயங்கள் தெளிவில்லாமலே இருக்கின்றன. தற்கால நூலகப் பண்புக்கமைய சரஸ்வதி மகால் இருந்ததாவென்பதையும் விளங்கிக் கொள்ள முடியாதிருக்கின்றது.

முத்துக்கவிராசர் என்பவரால் இயற்றப்பட்ட கைலாயமாலை என்னும் நூலிலே (அடிகள் 209-210)

"........................ பருமலர்ப்
புங்கவனைப்போலப் புவிபுரந்தியாண்டுவைத்த சங்கச் சமுகத்தமிழாளன்".

என்னும் அடிகள் வரோதய செகராசசேகரன் என்ற மன்னனைக் குறிப்பிடுவதாகக் கருதப்படுகின்றது. இவனுடைய ஆதரவின் கீழ் அக்காலத்தில் வைத்தியம் சோதிடம் போன்ற நூல்களும் மற்றும் பலவும் எழுதப்பட்டன. அத்துடன் வடமொழிப் புராணங்களும் மொழிபெயர்ப்புக்களுடன் செய்யப்பட்டன. இப்படைப்புக்கள் அனைத்தும் "சரஸ்வதி மகாலயம்" என்ற நூல்நிலையமொன்றில் பாதுகாக்கப் பட்டன".[3] என்று காலஞ்சென்ற பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வரசனுக்குப் பின்னர் இவனது தம்பியாகிய பரராசசேகரன் யாழ்ப்பாணக் குடாநாட்டை ஆளுங்காலத்தில் வர்த்தகோபாலம் பாடசாலைகள் அமைத்தும் தமிழ்ச் சங்கமொன்று தாபித்தும் தமிழை வளர்த்ததாக அறிய முடிகின்றது. புலவர்களைக் கொண்டு பலவகையான நூல்களையும் இயற்றுவித்தான். இவனமைத்த தமிழ்ச் சங்கமே இரண்டாவது தமிழ்ச் சங்கமாகும்.

"இம்மன்னன் அழிந்துபோன சரஸ்வதி மகாலயமென்னும் பெயர்படைத்த நூலகத்தைப் புதுக்குவித்து அதில் இந்தியாவிலிருந்து தென்மொழி வடமொழி நூல்களை வருவித்துப் பலரும் படிக்குமாறு உதவினன்".[4] எனக் கணேசையர் தமது ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம் என்னும் நூலிற் குறிப்பிட்டுச் சொல்கிறார். இவரது கூற்றினை உறுதிப்படுத்துவது போல முதலியார் இராசநாயகம் எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரம் பின்வருமாறு குறிப்பிட்டுச் சொல்கிறது.

---

முன் செண்பகப் பெருமாள் வெற்றி கொண்ட போது தமிழ்ச் சங்கத்தைப் பின்னரும் திரும்ப வேண்டிப் புலவர்களையு தமிழ் வித்துவான்களையும் ஒருங்கு சேர்த்து முன்போல் கழகம் நிறுவி வித்துவான்களுக்கு வேண்டிய சன்மானங்கள் செய்து தமிழ் மொழியைப் பொன் போல் போற்றி வளர்த்து வந்தான்.[5]

இவன் காலத்திலே யாழ்ப்பாணத்திலே கல்வி அறிவு சிறந்து விளங்கியதை வேறு வரலாற்று நூல்களும் எடுத்துக் காட்டி நிற்கின்றன. யாழ்ப்பாண வைபவம் என்னும் நூலிலும் இது குறிப்பிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணச்சரித்திரம் என்னும் நூலை எழுதிய ஜோன் என்பவரும் தமது நூலில் இதனைக் குறிப்பிட்டுச் சொல்கிறார்.

"செகராசசேகரன் வித்தியா அபிவிருத்திக்காக கலைகளையப்பியாசத்து வட நாட்டிலும் தென்னாட்டிலுமிருந்து தான் சவதரித்தச் சகல சாஸ்திரங்களையும் பிரவிருத்திப்படுத்தி வித்துவ சபை ஒன்றைக்கூட்டி நூல்களை யாக்குவித்துத் தானும் சோதிடம், செகராசசேகரம் என்னும் இரு நூல்களைச் செய்வான்.[6] இக்குறிப்புக்களிலும் சரஸ்வதி மகால் என்ற நூல்நிலையம் பிற்காலத்தில் எத்தகையதொரு வளர்ச்சியைப் பெற்றிருந்ததென்பதை ஓரளவுக்கு அறிய முடிந்தாலும் அந்த நூல் நிலையத்தினைப் பற்றிய விரிவான தகவல்களை அறிய முடியவில்லை. எனவே ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் இந்நூல்நிலையம் கையெழுத்துப் பிரதிகளைச் சேர்த்து வைக்கின்ற ஒரு இடமாக இருந்திருக்கிறதென்றே கொள்ள இடமுண்டு.

இதனால் இது யாழ்ப்பாணத்தில் நூலக வளர்ச்சியிலே முதலாவது படியினையே காட்டி நிற்கின்றது. அரசியல் வரலாற்றிலே கல்வி சிறப்புற்றிருந்த காலத்தில் அக்கல்விக்கு உதவியான நூல்களைத் தமிழிலோ அன்றேல் பிறமொழிகளிலோ எழுதப்பட்டவற்றைப் பேண வேண்டுமென்ற உணர்வின் அடிப்படையிலேயே இவை அங்கு சேகரிக்கப்பட்டிருக்கக்கூடும். மன்னர் ஆதரவும் இப்பணிக்கிருந்தமையால் அவற்றை ஓரிடத்திலே கொணர்ந்து வைத்திருக்கக்கூடும். எனவே இந்நூலகத்தின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் அக்காலத்தில் ஏற்பட்டிருந்த ஊக்கமான இலக்கிய வளர்ச்சியே காரணமெனலாம். இதனையே எமக்குக் கிடைத்த வரலாற்று ஆதாரங்களும் உறுதிப்படுத்தி நிற்கின்றன.

## மேலைத்தேசத்தவர் காலம்.

இத்தகையதொரு இலக்கிய வளர்ச்சி பிற்பட்ட காலத்தில் போர்த்துக்கேயர் ஒல்லாந்தர், காலத்தில் அந்நியரது படையெடுப்புக்களால் தடைப்பட்டது. கல்வி வளர்ச்சியால் இவர்கள் அதிகம் ஊக்கம் காண்பிக்கவில்லை. தமது சமயத்தினைப் பரப்புவதற்காக கல்வியை ஒரு கருவியாக்கினர். இதனால் சமயக் கல்வியே நாட்டில் வளரும் நிலை ஏற்பட்டது. கோவில்களைப் பாடசாலைகளாக்கி, சத்திய வேத போதனைக்கேற்ற கல்வியைச் சகலருக்கும் சமமாக பயிற்றினர். இக்காலத்தில் இவர்களால் மத சம்பந்தமான புத்தகங்களே பேணப்பட்டு வந்திருக்கலாம். இதனால் அவற்றை ஓரிடத்தில் தொகுத்து வைத்திருக்க எண்ணங் கொண்டிருந்தாலும் அதனை ஒழுங்காகச் செய்திருக்க முடியாது. தமது தேவைக்கேற்ற கையெழுத்துப் பிரதிகளையே தம் கோவில்களில் சேகரித்து வைத்திருக்கக்கூடும். இவற்றை நாம் நூல் நிலையங்களென கொள்ள முடியாது, ஏனெனில் அக்காலத்து மக்களுக்கு இவர்கள் மொழியும் பிற மொழியாக இருந்தமையால் அந்நூல்களை வாசிப்பதுவும் இலகுவான காரியமாக இருந்திருக்க முடியாது. இதனால் ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்திலிருந்த சரஸ்வதி மகாலைப் போன்றதொரு நூலகத்தின் வளர்ச்சியை இக்காலத்தில் காண முடியவில்லை. இதனால் நூலக வளர்ச்சியும், படிமுறை வளர்ச்சியையும், நாம் தீர்மானித்துக் கொள்ள முடியாதிருக்கின்றது. இக்காலப்பகுதியைப் பற்றிய சரித்திர மூலாதாரங்களும் எமக்கு இது பற்றிய தகவல்களை தரக்கூடியனவாக இல்லை. எனவே நூலகங்களில் நூல்கள் சேகரிக்கப்படுவதுபோல கிறிஸ்தவ ஆலயங்களிலே இந்நூல்கள் சேகரித்து வைக்கப்பட்டிருக்கலாமென்ற ஒரு நிலையையே நாம் ஊகிக்கக் கூடியதாக இருக்கின்றது. இதுவே பிற்காலத்தில் நூலக வளர்ச்சியின் படிமுறைக்கு வழி கோலுவதாக அமைகின்றது.

ஆனால் ஒல்லாந்தர் காலத்தில் இச்சமயம் பரப்புகின்ற பணியும் நல்லெண்ணத்தோடு நடந்ததென்று கூறுவதற்கில்லை. இவர்கள் போர்த்துக்கேயர் காலத்தில் அங்கிருந்த உரோமன் கத்தோலிக்க கோவில்களையும் கன்னியர் மடங்களையும் அழித்துவிட்டு தமது சமயத்தை இந்நாட்டிலே பரப்புவதற்காக அதிக பொருள் செலவழித்து சமயக் கல்விச் சாலைகளை நடத்திவந்ததாக தெரிகின்றது. ஆனால் அதுவும் அவர்கள் சரியான முறையிலே நடத்தாததன் காரணமாக தோல்வியுற்றது.

அவர்கள் கோவில்களிலே சேகரித்து வைத்திருந்த கிறிஸ்தவ வணக்கத்திற்குரிய புத்தகங்கள், கிறிஸ்தவ வினாவிடைப் புத்தகங்களுடன் சைவப்புத்தகங்களும், சேர்ந்திருந்தன."[7].

இது சமயப் பரம்பல் சரியான முறையில் நடைபெறவில்லையென்பதற்கு ஆதாரமாக இருந்தாலும் அதே வேளையில் அவர்கள் காலத்தில் யாவருக்கும் தமக்குப் பின்னர் வருகின்ற எதிர்கால சந்ததிகளுக்கு உதவும் நோக்கத்துடன் நூல்களைப் பத்திரப்படுத்துகின்ற பண்பு இருந்ததென்ற கருத்து இடமுண்டு. இங்கு சமய முயற்சிகள் நூலகங்களின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் துணையாவதனைக் காண முடிகின்றது. எனினும் பொது மக்கள் இவ்வாறு சேகரித்து வைக்கப்பட்டிருந்த புத்தகங்களை எடுத்து வாசிப்பதற்கு வசதியிருந்ததா என்பதும் அறிய முடியாததாக இருக்கின்றது.

ஒல்லாந்தர் காலத்தில் பாடங்கள் யாவும் தாய் மொழியிற் படிப்பிக்கப்பட்டன. அச்சியந்திரமும் இக்காலத்தில் இருந்தமையால் அது சிங்கள தமிழ் புத்தகங்களை அச்சடிக்க உதவியது. இதனால் நூல்கள் நாட்டிலே பெருகத் தொடங்கின. எனினும் எனினும் இதனால் நூல்நிலையங்களின் வளர்ச்சியை நிர்ணயித்துக்கொள்ள முடியவில்லை.

(தொடரும்)..

அடிக்குறிப்பு. ( )

1. வித்துவான். சி. கணேசையர்.
   *ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம்*. யாழ்ப்பாணம். ஈழகேசரி பொன்னையா வெளியீடு, 1939. பக். 6.
2. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.
   *யாழ்ப்பாணச் சரித்திரம்*. யாழ்ப்பாணம்: நாவலர் பிரஸ், 1933.
   பக். 21.
3. கணபதிப்பிள்ளை.
   தொகுதி 6.
   எண். 4. 1948.
4. *ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம்*. பக். 9 - 10.
5. முதலியார், செ. இராசநாயகம்.
   *யாழ்ப்பாணச்சரித்திரம்*. யாழ்ப்பாணம்:. 1933: பக். 17.
6. எஸ். ஜோன்.
   *யாழ்ப்பாணச் சரித்திரம்*. யாழ்ப்பாணம்: அமெரிக்கன் சிலோன் மிசன். 1882. பக். 32.
7. க. கணபதிப்பிள்ளை.
   *ஈழத்து வாழ்வும் வளமும்*. சென்னை: பாரிநிலையம், 1962.
   பக். 26.

## கிராம நூலக இயக்கம் - அறிமுகம்

என். செல்வராஜா
நூலகர்
இவ்லின் இரத்தினம் நிறுவனம்

பல்வேறு சமூக சேவைகளில் பொது நூலக சேவையும் ஒன்றாகும். ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக மனித குலத்தால் சேகரிக்கப்பட்ட அறிவுச் சாதனங்களை எத்தகைய கட்டுப்பாடுகளோ, வேறுபாடுகளோ இன்றி மக்களுக்கு வழங்க வேண்டியதாக நூலகம் உள்ளது. அத்துடன் சமூகத்துக்கோ, தனி நபருக்கோ எளிதில் கிடைக்கக் கூடியதான முறையில் நூல்களை ஒழுங்கமைத்து வைத்திருப்பதும் அவசியமாகின்றது.

நூலகவியல் தொடர்பான சிந்தனைகள் மிகப் பழமையானவை. மனித குலம் அச்சுக் கலையை அறிந்து கொள்ளும் முன்னரே நூலகங்கள் தமது சேவையை ஆரம்பித்து விட்டதற்கான வரலாற்று ஆதாரங்கள் உள்ளன. அரண்மனைகளிலும், கோவில்களிலும், மடாலயங்களிலும் நூலகங்கள் இயங்கி வந்துள்ளன. அன்று பொது நூலக சிந்தனைகள் உருவாகி இராமையால் புராதன நூலகங்கள் ஒரு குறிப்பிட்ட வட்டத்தினருக்கே தமது சேவையை வழங்கி வந்துள்ளன. அரண்மனை நூலகங்கள், மன்னர் மந்திரிகளுக்கு மட்டும் பயன்பட்டன. குடி மக்கள் நூலகங்களை நாட அனுமதிக்கப்படவில்லை. மடாலயங்களிலும் கோவில்களிலும் காணப்பட்ட நூலகங்கள் ஆவணக் காப்பகங்களாகவும் மடாலயக் குருக்களுக்கு உதவும் வகையில் உசாத்துணை நூலகங்களாகவும் இயங்கி வந்துள்ளன.

நூலகங்களின் பயன்பாடு உயர் குடியினருக்கு மட்டுமே என்ற கோட்பாடு காலக் கிரமத்தில் மாறுவதாயிற்று. அச்சுக் கலையின் தோற்றம் காரணமாக ஏற்பட்ட புதிய மறு மலர்ச்சியினால் நூலகங்கள் அறிவைத் தேடும் மக்களுக்குப் பயனளிக்க வேண்டியன என்ற புதிய கருத்து உருவாயிற்று. இக்கருத்தானது காலக் கிரமத்தில் பொது சன நூலக இயக்கம் உருவாகக் காரணமாயிற்று. ஆயினும் 20ம் நூற்றாண்டின் முற்பகுதி வரை நகரை அண்டிய இடங்களிலேயே நூலகங்கள் அமைக்கப்பட்டு வந்துள்ளன. மாளிகைகள், உயர் மக்களின் இல்லங்கள், சமய நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் போன்றவற்றில் நூலகங்கள் அமைக்கப்படலாயின.

உலகக் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி வசதி வேண்டும் என்ற கோசம் சர்வதேச ரீதியில் எழுப்பப்பட்டதை அடுத்து நூலக சேவை பொது நூலக சேவையாக, படிப்படியாக மாற்றமடைந்து பின்னர் எழுத்தறிவுள்ள எவர்க்கும் பயன் தரும் முறையில் நூலக சேவை விரிவுபடுத்தப்பட வேண்டும் என்ற கருத்து, பரவலாக உருப் பெறுவதாயிற்று.

பொது நூலக இயக்கம் பற்றிய கருத்து வலுவடைந்திருந்த போதிலும் கிராம மட்டத்தில் அதன் செல்வாக்கு 20ம் நூற்றாண்டின் பின் அரைப் பகுதியிலேயே பரவலாயிற்று. ஆயினும் இன்று வரை பெரும்பான்மையான

உலகின் சனத்தொகையில் மூன்றில் இரு பங்கு கிராமங்களிலேயே உள்ளனர். நகரங்கள், கிராமங்களிலேயே உணவு முதலியவற்றுக்குத் தங்கியுள்ளன. அவ்வகையில் நோக்குமிடத்து கிராமங்கள் பொருளாதார ரீதியில் வளர்ச்சி அடையத் தக்கதாக அறிவு பெறும் பொருட்டு நூலக சேவை, கூடியளவு கிராமங்களை நோக்கியே நகர்த்தப்படல் வேண்டும்.

1981ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இலங்கை குடிசன மதிப்பீட்டின் படி முழு இலங்கையிலும் உள்ள சனத்தொகையில் பாடசாலைக்குச் செல்லாதவர்களின் (எழுத்தறிவற்றவர்களின்) சதவீதம் நகர மட்டத்தில் 8.9% ஆகவும் கிராம மட்டத்தில் 14.5% ஆகவும் காணப்படுகின்றது. இவ்விகிதத்தை 1971ம் ஆண்டுக் கணிப்புடன் ஒப்பிடுகையில் அரைப் பங்கு குறைவாகும். 1971ம் ஆண்டில் நகர மட்டத்தில் 15.6% ஆகவும் கிராம மட்டத்தில் 24.6% ஆகவும் பாடசாலைக்குச் செல்லாதவர்களின் விகிதம் கணிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்திற்குரிய புள்ளி விபரங்களை உதாரணத்துக்காக எடுத்துக் கொள்வோம். 1981ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டின் அடிப்படையில் பத்து வயதுக்கு மேற்பட்டவர்களில் யாழ்ப்பாண மாவட்டத்துக்குள் உள்ளவர்களது எண்ணிக்கை 6,31,245 ஆகும். இதில் 2,09,889 பேர் நகரங்களை அண்டியும் 4,21,356 பேர் கிராமங்களை அண்டியும் வாழ்கின்றனர். இந்தச் சனத்தொகையில் நகரத்தில் உள்ளவர்களில் 96 சதவீதமானோர் (2,01,507 பேர்) எழுத்தறிவுள்ளவர்களாகவும் 4 சதவீதமானோர் (8,382 பேர் ) எழுத்தறிவற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். கிராமத்தை அண்டி வாழ்பவர்களில் 92.1 சதவீதமானோர் (3,88,076 பேர்) எழுத்தறிவுடையோராகவும் 7.9 சதவீதமானோர் ( 33,280 பேர் ) எழுத்தறிவற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். நகரத்தின் சனத்தொகை வீதத்துடன் ஒப்பிடுகையில் கிராமங்களை அண்டி வாழ்பவர்களின் எழுத்தறிவின்மை வீதாசாரம் இரு மடங்காகக் காணப்படுவது அவதானிக்கப்படல் வேண்டும். அடிப்படைக் கல்வி வசதிகள் கிராமங்களை நோக்கி நகரும் இவ்வேளையில் முறைசாராக் கல்வி முறைகளையும் அவ்வாறே கிராமங்களை நோக்கி நகர்த்தல் அவசியம். அவ்வகையில் கிராம நூலகங்களின் பங்களிப்பு இன்றைய கால கட்டத்தில் மிகவும் இன்றியமையாததாகும். நூலகம் ஒரு சிறந்த பல்கலைக்கழகம் என்பர். எவர்க்கும் அங்கு அறிவைப் பெற்றுக் கொள்ள வசதி ஏற்படுத்தித் தரல் வேண்டும். இன்று கிராம - நகர மக்களிடையே காணப்படும் பொருளாதார, அறிவு ரீதியான ஏற்றத் தாழ்வுகளின் அடிப்படையும் எழுத்தறிவின்மையேயாகும். கிராம நூலக இயக்கத்தின் மூலம் இத்தகைய எழுத்தறிவின்மையைப் பூண்டோடு ஒழித்து விட முடியும்.

தற்கால கிராம - நகர அமைப்பில் பெரும்பான்மையான தனவந்தர்களும், அறிஞர்களும் நகரை அண்டியே வாழ்கின்றனர். அவர்கள் பிறந்து வளர்ந்த கிராமங்களில் கிடைக்கும் செல்வங்களைத் தமது நகர்வின் பொருட்டு, கிராமங்களிலிருந்து நகரங்களை நோக்கிக் கொண்டு செல்கின்றனர்.

கிராமத்தில் கல்வி பயின்ற ஒருவர் உயர் கல்விக்காக நகரை நாடுகின்றார். அவரது உயர் கல்வி நகரச் சூழலில் மேற்கொள்ளப்படுவதால் பின்னர் கல்வியை முடித்த பின் அவரால் மீண்டும் தன் கிராம வாழ்வுக்குத் திரும்ப முடிவதில்லை. அதனால் அவர் நகரச் சூழலிலேயே வசதிகளுக்காகத் தங்கி விடுகின்றார். மீண்டும் தன் கிராமத்துக்கு வந்து சேவையாற்ற அவர் விரும்புவதில்லை. இதன் காரணமாக நகரங்களில் சனத்தொகை அதிகரிக்கின்றது. குறுகிய நிலப்பரப்பில் கூடிய சனத்தொகை காணப்படுகின்றது. கிராமங்களில் சனத்தொகை, நில விகிதாசாரத்தின் அடிப்படையில் நோக்குமிடத்து ஐதாகவே காணப்படுகின்றது.

ஓரிடத்தில் பொது நூலகமொன்றை நிறுவும் போது கவனத்துக்கு எடுத்துக் கொள்ளும் மிக முக்கியமான காரணிகளிலொன்று சனத்தொகையாகும். இன்றைய அமைப்பு முறையில் நமது பிரதேசங்களில் பெரும்பான்மையான நூலகங்கள் நகரை அண்டிக் காணப்படுவதற்கு இதுவே காரணம் எனலாம். நகரத்திலுள்ள சனத்தொகை விகிதத்துக்கேற்ப நூலகங்களின் தேவை உணரப்படுவதால் அங்கு குறுகிய நிலப்பரப்பில் ஒன்றுக்கு மேற்பட்ட நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கிராமங்களிலும் இவ்வாறே சனத்தொகை விகிதாசார முறையில் திட்டமிடப்படும் போது நூலகங்களின் எண்ணிக்கை குறைகின்றது.

கிராமங்களில் பொது நூலகங்களுக்கிடையே இடைவெளி அதிகமாகக் காணப்படுவதன் காரணமாக ஒரு நூலகத்தின் சுற்றுடலில் வாழும் மக்களே அதன் வாசகர்களாக இருக்கின்றனர். சற்றுத் தொலைவில் உள்ளவர்களில் வாசிக்கும் ஆர்வம் உள்ளவர்களே இந்த நூலகத்தை நாடி வருகின்றனர். அத்தகையவர்களில் பெரும்பான்மையோர் அருகாமையில் உள்ள கிராம நூலகத்தை விடத் தொலைவில் உள்ள நகரை அண்டிய பெரிய நூலகத்தை நாடவே விரும்புகின்றார்கள். நூலகங்களை மக்கள் நாட முற்படாத வேளை, நூலகங்கள் மக்களை நாடி நகர வேண்டும் என்ற சிந்தனை படிப்படியாக இன்று எமது கிராமங்களில் வளர்ந்து வருகின்றது. இதன் காரணமாகவே ஏற்கனவே இருந்து வந்த நூலகங்களுக்கான இடைவெளியைக் குறைக்கும் நோக்குடனும், அதிகளவு மக்களுக்குப் பயனளிக்கும் வகையிலும் கிராம நூலக இயக்கம் பற்றிய சிந்தனை வளர்ந்து வருகின்றது. அண்மைக் காலங்களில் பத்திரிகைகளில் காணப்படும் தகவல்களைக் கண்ணுறுமிடத்து கிராமங்கள் தோறும் நாளாந்தம் புதிய நூலகம் அமைக்கப்படுவதாகவோ, பழைய நூலகம் புனரமைக்கப்படுவதாகவோ நூலக வாரம் கொண்டாடப்படுவதாகவோ செய்திகள் வருவதனை அவதானிக்கலாம். இது மகிழ்வுக்குரியதொரு மாற்றமாகும்.

கிராம நூலக இயக்கம் இன்று வளர்ந்து வருவதற்கு மேலும் சில காரணங்களைக் கூறலாம். தகவல் தொடர்பு சாதனங்களின் அபரிமிதமான வளர்ச்சியின் காரணமாகக் கிராம மக்களுக்குத் தகவல்களைத் தேடும் ஆர்வம் வளர்ந்து வருகின்றது. வானொலி தொலைக் காட்சிச் சாதனங்களின் கிராம ஊடுருவல் காரணமாகக் கிராமங்களில் மக்கள் தம் அறிவை மேலும் விருத்தி செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டு வருகின்றது.

தொலைக் காட்சியில் தாம் காணும் ஒரு காட்சியுடன் அவர்கள் திருப்திப் பட்டுக் கொள்வதில்லை. அது தொடர்பான மேலதிக தகவல்களை அவர்கள் நாடுகின்றனர். அத்தகவல்களை இலகுவில் பெற நூலகங்களை நாட வேண்டிய தேவை அவர்களுக்கு இயல்பாகவே ஏற்படுகின்றது.

கிராமங்களிலிருந்து தொழில் வாய்ப்புகளுக்காக அயல் நாடு செல்பவர்களின் எண்ணிக்கை முன்னெப்போதுமில்லாதவாறு இன்று அதிகரித்து வருகின்றது. தன் மகன் சென்ற நாட்டைப் பற்றிய தகவலைப் பெற ஒரு அன்னை முயல்வது இயல்பே. வெளிநாடு சென்ற கிராமத்தவர் நாள்தோறும் எழுதும் கடிதங்களுள் பல புதுத் தகவல்கள் புதைந்து கிடக்கும். இவை யாவற்றையும் விளங்கிக் கொள்ளும் ஆர்வம் காரணமாக இன்று நூலகங்களை நாடி மக்கள் நகரத் தொடங்கி இருக்கின்றார்கள்.

அரசின் அபிவிருத்தித் திட்டங்களும் இன்று கிராமங்களை நோக்கிச் செயற்படுவதாக உள்ளன. இதனால் கிராமங்களின் முக்கியத்துவம் பரவலாக உணரப்படுகின்றது. விவசாயம், கைத்தொழில், கிராமியத் தொழில் நுட்பம் போன்ற துறைகளில் புதுப் புதுத் தகவல்கள் நாள்தோறும் தேடப்படுகின்றன. இதனால் இரு தலைமுறைகளுக்கிடையே பலத்த வேறுபாடு காணப்படுகின்றன. ஒரு தந்தையை விட அவரது மகன் கூடியளவு அறிவுப் பரப்பினைத் தெரிந்து வைத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் சூழ்நிலை காரணமாக ஏற்பட்டுள்ளது. இதனால் நூலகங்களின் தேவை முன் எப்போதுமில்லாதவாறு கிராமங்களில் உணரப்பட்டு வருகின்றது.

ஒரு கிராமத்தில் நூலகம் அமைக்க உத்தேசிக்கும் போது எதிர் நோக்கும்வேண்டிய முக்கிய விடயங்கள் சில வருமாறு.

1. நூலகத்தை நிர்மாணிப்பதற்கான வசதியான இடத்தைத் தெரிவு செய்தல் வேண்டும்.
2. தேவைப்படும் நிதியைத் திரட்ட ஒழுங்குகள் செய்தல் வேண்டும்.
3. கிராமத்தின் தேவை, அத்தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய நூலகத்தின் சேவை பற்றிய உணர்வும், நம்பிக்கையும் கொண்ட அரசு அதிகாரிகளின் ஒத்துழைப்பைத் தேடிக் கொள்ளல் வேண்டும்.
4. கிராமத்தில் இது வரை கிடைக்காத அறிவுச் சாதனங்களைச் சேகரித்துக் கிராமத்துக்குக் கொண்டு வரல் வேண்டும்.
5. நூலகத் துறையில் ஓரளவு பயிற்சி பெற்ற தொண்டுள்ளம் கொண்ட ஊழியர்களைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

இச்சந்தர்ப்பத்தில் நூலகத்துக்கும், வாசிகசாலைக்கும் இடையேயுள்ள சில வேறுபாடுகளை விளக்க வேண்டியதும் அவசியமாகின்றது. கிராமிய வழக்கில் " நூலகம் " என்ற பதம் " வாசிகசாலை "களையே குறிப்பிடுகின்றது. வாசிகசாலை ஒன்றில் கிராம மக்களினால் உவந்தளிக்கப்படும் அன்றைய புதினப் பத்திரிகைகள் வைக்கப்பட்டிருக்கும். அவரவர்கள் சுதந்திரமாக அன்றைய செய்திகளை வாசிப்பதற்கேற்ப வாசிகசாலையானது

சனசமூக நிலையங்களிலோ, கிராம அபிவிருத்திச் சங்கங்களிலோ தனியார், பொதுக் கட்டடங்களிலோ இயங்கும். சில முன்னேறிய வாசிகசாலைகளில் ஒரு சில சஞ்சிகைகளும் மேலதிகமாகக் காணப்படும். நாம் இக்கட்டுரையில் குறிப்பிடும் " நூலகம் " என்பது " வாசிகசாலை " அன்று. வாசிகசாலையை நூலகத்தின் பல சேவைகளில் ஒன்றாகவே கருதப்படல் வேண்டும்.

நூலகமானது கிராமத்தின் தகவல் நிலையமாகவும், அறிவு சாதனங்களின் களஞ்சியமாகவும் செயற்படும் ஒரு அமைப்பாகும். இங்கு நூல்களும் பிற அறிவுச் சாதனங்களும் சேகரித்து ஒழுங்குபடுத்தப்பட்டு வைக்கப்பட்டிருக்கும். தேவையைக் கருதி அச்சாதனங்களிலிருந்து இலகுவான முறையில் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கேற்ப ஒரு பகுப்பு முறையின் அடிப்படையில் வகைப்படுத்தி வைக்கப்பட்டிருக்கும். அறிவு நாடி வரும் வாசகர் இலகுவான முறையில் தான் தேடும் தகவலைப் பெற்றுக் கொள்ள அங்கு வசதிகள் செய்யப்பட்டிருக்கும். நூலக அமைப்புத் தொடர்பான செயல்முறைகளை விளக்கும் அடுத்து வரும் தொடர்களில் "நூலகம்" பற்றிய மேலும் தெளிவான கருத்தை வாசகர் பெற்றுக் கொள்ளலாம்.

கிராம நூலகங்களுக்கான ஒழுங்கு விதி முறைகள் எதுவும் இதுவரை உருவாக்கப்படவில்லை. கிராமத்தின் சூழ்நிலைக்கேற்ப இவை தீர்மானிக்கப்படல் வேண்டும். கிராமத்தின் வரலாறு, கலாச்சாரப் பின்னணி, புவியியல் காரணிகள், மக்களின் தொகை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு இவ்விதி முறைகள் உருவாக்கப்படல் வேண்டும்.

பொதுவானதொரு கிராம நூலகத்தின் நோக்கமானது மூன்று அடிப்படைகளில் அமைகின்றது.

1. கிராமத்தவரின் அறிவு வளர்ச்சிக்கும், பொழுது போக்குக்குமான அறிவு சாதனங்களை வழங்கல். இவை கிராமத்தின் தனிப்பட்ட நபருக்கும் சமூக அபிவிருத்திக்கும் உதவுவனவாக அமைய வேண்டும்

2. ஒரு கிராம நூலகத்தை நிர்வகிக்கவும், தேவைப்படும் தகவல்களைத் தன் சேகரிப்பிலிருந்து தேடி எடுத்துக் கொடுக்கவும், இல்லாத தகவல்களைப் பெற்றுக் கொள்ள வாசகர்களுக்கு வழி காட்டவும் பயிற்சி பெற்ற ஊழியர்களின் சேவை வேண்டும்.

3. அறிவு தேடலில் கிராமத்துக்குச் சகல வழிகளிலும் நெருங் காலம் நிலைத்திருந்து உதவும் வகையில் ஒரு நூலகத்தை நிர்மாணித்தல் அவசியமாகும்.

இம்மூன்று நோக்கங்களையும் கருத்திற் கொண்டு ஒரு கிராம நூலக அமைப்பை உருவாக்கும் போது ஏற்படும் சில நடைமுறைச் சிக்கல்களை இனி நாம் நோக்குவோம்.

1. ஒரு கிராம நூலகத்தின் நூல் தேர்வு செய்யும் போது உதவும் நூல் விபரப்பட்டியல்கள், வழிகாட்டி நூல்கள் போன்றவை கிராமத்தில் பெற முடியாது போகலாம். எனவே நூலகர்

கடின முயற்சியில் ஈடுபட்டுத் தேவைப்படும் தகவல்களைப் பெற்றுக் கொண்டு அதன் உதவியுடன் நூல். தேர்வு நடவடிக்கையில் ஈடுபட வேண்டி நேரிடும்.

2. ஒரு கிராம நூலகத்தில் அங்கத்தவர்கள் சிறிய எண்ணிக்கையாகவே இருப்பர். நூலகத்துக்கெனப் பெற்ற நூல்கள் பாவித்துக் கிழிந்து போக முன்னரே அவை வாசித்து முடிக்கப்பட்டு விடும். நூலகத் தட்டுக்களில் பெரும்பாலான இடத்தைப் பயன்படுத்தப்பட்ட நூல்களே ஆக்கிரமித்திருக்கும்.

3. பெரும்பான்மையான கிராமிய வாசகரின் நூற் தேர்வில் முதல் நிலை வகிப்பது ஜனரஞ்சக நூல்களாகும். இதனால் ஒரு சில சாதாரண வாசகர்களைத் திருப்திப்படுத்தும் வாய்ப்பு கிராம நூலகங்களில் குறைவாகவே காணப்படும்.

4. ஒரு நகர நூலகத்துடன் ஒப்பிடும் போது கிராம நூலகரின் நூலக அறிவு குறைவாகவே காணப்படும் சாத்தியம் உள்ளது. விசேட நூலகர்களது தொடர் சேவையைப் பெறும் சக்தி கிராம நூலகங்களுக்குக் கிடைப்பது அரிது. கிராம நூலகரது சேவைப் பரப்பின் விகிதமும் குறைவாகவே இருக்கும். இதனால் ஒரு சிறிய வட்டத்துக்குள் மட்டும் ஒரு கிராம நூலகம் இயங்க வேண்டி ஏற்படலாம்.

5. நிதி வசதிக் குறைவு காரணமாகத் துரித முன்னேற்றம் காண்பதற்கு ஒரு கிராம மட்டத்திலான நூலகத்துக்கு இயலாது போகலாம். நூலக சேவையினை " வெள்ளை யானை " என்று அடைமொழியிட்டு அழைப்பர். ஏனெனில் அது ஒரு சேவை மட்டுமே. அதற்கு முதலீடு செய்வதன் மூலம் முதலீட்டின் வருமானம் பணப் பெறுமதியில் கிடைக்காது. அதன் பயன்பாடான " அறிவு வளர்ச்சி " யைப் பணத்தின் அடிப்படையில் மதிப்பீடு செய்யல் இயலாது. இது ஒரு புனிதமான சேவையாயினும் நிதி வருவாயை முக்கியமாகக் கருதும் சில நிர்வாகங்களுக்கு இச் சேவைக்கான முதலீடு வீண்விரயமாகத் தோன்றுவதுண்டு. இதன் காரணமாக பிற சேவைகளுடன் நூலக சேவையினை ஒப்பிடுகையில் இதற்குப் பூரண ஆதரவுடன் நிதி வழங்குபவர் அரிதாகவே உள்ளனர்.

கிராம நூலக உணர்வின் காரணமாக எப்போது பல கிராமங்களில் நூலகங்களை நிறுவும் ஆர்வம் காணப்படினும் இத்துறையில் முறையான அறிவு பெற்றவர்கள் கிராமங்களில் காணப்படாமையால் இத்திட்டங்களை வழி நடத்திச் செல்ல வசதியின்றி ஆர்வங்கள் வெறும் ஆர்வங்களாகவே நின்று மங்கி மறைந்து விடுகின்றன.

ஏற்கனவே உருவாக்கப்பட்ட சில நூலகங்கள் முறையான வழிகாட்டலைப் பெற்றுக் கொள்ள முடியாமையால் அபிவிருத்தி இன்றியும் குறிப்பிட்ட ஒரு வட்டத்துக்குள் மட்டும் தமது சேவையை மட்டுப்படுத்திக் கொண்டும் இயங்கத் தலைப்பட்டுள்ளன.

( தொடரும் )

# மத்தியமயமாக்கப்பட்ட பட்டியலாக்கம்
# ( Centralized …taloguing )

***************************

திருமதி விமலா. பாலசுந்தரம்
உதவி நூலகர்,
யாழ். பல்கலைக்கழகம்.

நவீன உலகின் விஞ்ஞான தொழில்நுட்பத்துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சியின் பயனாகவும் அச்சுயந்திரத்தின் அறிமுகம், கைத்தொழில் வளர்ச்சி, அறிவியல் வளர்ச்சி என்பனவற்றின் காரணமாகவும் பல்வேறு துறைசார்ந்த அறிவியல் ஆவணங்களின் வெளியீடுகள் நாளாந்தம் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. இவ்வாவணங்களைச் சேகரித்து ஒழுங்குபடுத்தி, மக்கள் அவற்றைப் பயன்படுத்தும் வண்ணம் சேவைப்படுத்தும் நிறுவனமாகவே நூலகங்கள் விளங்குகின்றன.

நூலகங்களிலேயுள்ள பல்வேறு வகைப்பட்ட ஆவணங்களை வாசகர்கள் இலகுவில் இனங்கண்டு பயன்படுத்தும்வண்ணம் அவற்றை ஒழுங்குபடுத்துவதில் நூலகங்கள் பெருமளவு நேரத்தையும், மனித சக்தியையும், பொருளையும் செலவிட்டு வருகின்றன. ஒவ்வொரு நூலகமும் தனது இருப்பிற் சேர்த்துக்கொள்ளும் நூலைப் பட்டியலாக்கம் பகுப்பாக்கம் செய்து சேவைப்படுத்துவதற்குக் குறைந்தது இருவாரகாலமாவது எடுப்பதனை நடைமுறையில் காணலாம். நூலக ஆவணங்களைப் பட்டியலாக்கம் பகுப்பாக்கம் செய்வதில் சகல நூலகங்களிலும் ஒரே தன்மையான தரமான கொள்கைகள் பின்பற்றப்படுவதாகவும் கூறுவதற்கில்லை.

இத்தகையதொரு நிலையில் உருவாக்கப்பட்டதே மத்தியமயமாக்கப்பட்ட பட்டியலாக்கமுறையாகும். குறிப்பிட்ட ஒரு மத்திய நிறுவனத்தில் நூலக ஆவணங்களுக்குப் பட்டியற் பதிவுகள் தயாரிக்கப்பட்டு, ஏனைய நூலகங்களின் பயன்பாட்டிற்கென அப்பதிவுகளை வழங்குதலையே இம்முறையானது குறிக்கின்றது. இம்முறையிலான பட்டியலாக்கமானது ஒரே வகையான நூலகங்களிடையே மேற்கொள்ளப்படலாம். அல்லது பலவகையான நூலகங்களிடையே நடைபெறலாம். எவ்வாறாயினும் ஒருமத்திய நிறுவனத்தில் அல்லது நூலகத்தில் பட்டியல் பதிவுகள் தயாரிக்கப்பட்டு ஏனைய நூலகங்கட்கு விநியோகிப்பதனையே, மத்தியமயமாக்கப்பட்ட பட்டியலாக்க முறையின் பிரதான செயற்பாடாகக் கொள்ளப்படுகின்றது.

இவ்விடயம் பற்றி நூலகவியற் கலைக்களஞ்சியம் பின்வரும் வரைவிலக்கணத்தைத் தருகின்றது.

> " நூலகங்களின் அமைப்பொன்றிலுள்ள எல்லா நூலகங்களிலும் கொள்வனவு செய்யப்பட்ட சகல நூலகளையும் ஒரு நூலகம் அல்லது பட்டியலாக்க அலுவலகம் பட்டியலாக்கம் செய்தல்; இவ்வாறு தயாரிக்கப்பட்ட பதிவுகளை நூலக அமைப்பிலுள்ள தனிப்பட்ட நூலகங்கள் யாவும் பயன்படுத்துதலாகும். "

இத்தகைய சேவைக்குச் சிறந்த உதாரணமாகப் பிரித்தானிய நூலகத்தின் பிரித்தானிய
[illegible]

அட்டைச்சேவை என்பனவற்றைக் குறிப்பிடலாம். இன்று இவை இயந்திரமூலம் வாசிக்கக் கூடிய பட்டியல் பதிவுகளை, தயாரித்து வழங்குகின்றமையும் அவதானிக்கத்தக்கதாகும்.

மத்தியமயமாக்கப்பட்ட பட்டியலாக்க முறையானது திறம்படச் செயற்படுவதற்கு வேண்டிய அம்சங்களை வருமாறு பகுத்து நோக்கலாம்:-

1. நூலகங்களில் பயன்படுத்தப்படுகின்ற பட்டியலாக்கம் பகுப்பாக்கம் என்பனவற்றில் ஒற்றுமைத்தன்மை ( Uniformity ) இருத்தல் அவசியமாகும். மத்திய நிறுவனத்தினால் தயாரித்து வழங்கப்படுகின்ற பட்டியற் பதிவுகளைப் பயன்படுத்த முன்வரும் நூலகங்களிடையே, அவற்றினால் பின்பற்றப்பட வேண்டிய பகுப்பாக்கத் திட்டம், பட்டியலாக்க விதிமுறை என்பனபற்றி ஒப்பந்தம் செய்யப்படுதல் வேண்டும். ஒவ்வொரு நூலகமும் தாம் விரும்பியவாறு மாற்றங்களைச் செய்து பட்டியற் பதிவுகளைப் பயன்படுத்த முயலுமாயின் இத்தகைய சேவை வெற்றிகரமான முறையில் செயற்படமுடியாது போய்விடும்
2. ஒரு மத்திய நிறுவனமானது தனது சேவையினை ஆரம்பிக்குமுதல் அச் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டிய ஆவணங்கள் பற்றித் தீர்மானம் எடுத்தல் வேண்டும். குறிப்பிட்ட நாட்டு வெளியீடுகளை மட்டும் சேர்ப்பதா; நூலக ஆவணங்களின் பல்வேறுபட்ட வகைகளில் எவற்றை உள்ளடக்குவது; என்பன பற்றி முதலில் தீர்மானித்தல் வேண்டும். தற்போது நூலகங்களில் நூல உருவல்லாத ஆவணங்கள் முக்கிய இடம் பெறுவதால் இவைபற்றியும் தீர்மானம் எடுத்தல் இன்றியமையாததாகின்றது.

சகல நூலக இருப்புக்களும் ஒரே தன்மைத்தவையாயின் மத்தியமயமாக்கப்பட்ட பட்டியலாக்கம் இலகுவானதாக அமைந்துவிடும். இதற்கு நூலகங்களில் உள்ள நூல்களின் தன்மை வரையறுக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். உதாரணமாகப் பிரித்தானிய நூலகத்தின் பிரித்தானிய தேசிய நூல் விபரப் பட்டியல் ( BNB ) பிரித்தானிய வெளியீடுகளைப் பற்றிய தகவல்களையே கொண்டுள்ளது. இந்நிலையில் இச்சேவையினால் பயன்பெறும் பிறிதொரு நூலகம் மேலதிகமாக வெளிநாட்டு நூல்களைச் சேர்த்துக் கொள்ளுமாயின் அந்நூலகமானது தனது இருப்பிலுள்ள, அப்பிறநாட்டு நூல்களுக்குப் பட்டியலாக்கம் செய்துகொள்ள வேண்டியதாகின்றது. எனவே மத்தியமயமாக்கப்பட்ட பட்டியல் சேவையை வழங்கும் ஒரு நிறுவனமானது பிறநாட்டு நூலகங்களுடன் அல்லது பிறநாட்டிலுள்ள இத்தகைய நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு, அவ்வந்நாட்டு வெளியீடுகள் பற்றிய விபரங்களையும் சேகரித்துத் தனது பட்டியலாக்க சேவையினை விரிவுபடுத்த வேண்டியதாகின்றது.

இதற்குச் சிறந்த உதாரணமாகக், காங்கிரஸ் நூலகத்தின் பட்டியல் அட்டைச் சேவையினைக் குறிப்பிடலாம். காங்கிரஸ் நூலகத்தின் பட்டியல் அட்டைச் சேவையானது ஆரம்பகாலம் (1901) முதல் அமெரிக்க வெளியீடுகளையே உள்ளடக்கியதாக இருந்தது. 1965ஆம் ஆண்டில் அமெரிக்க

காங்கிரசின் உயர்கல்விச் சட்டத்தின்படி, தனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்திக் காங்கிரஸ் நூலகமானது பங்குப் பட்டியலாக்கமுறையினை (Shared Cataloguing). அறிமுகப்படுத்தியது. இதற்கமைய உள்நூரில் மட்டுமல்ல, பிறநாடுகளிலிருந்தும் பிரதிநிதிகள் மூலம் அந்தந்த நாட்டு வெளியீடுகள் பற்றிய விபரங்களைப் பெற்று இச்சேவையிற் சேர்த்துக் கொண்டது. இதன் தொடர்ச்சியாக 1969இம் ஆண்டு தொடக்கம் பிரித்தானிய வெளியீடுகள் பற்றிய விபரங்களைக் கொண்ட "மார்க்" பதிவுகளையும் தனது "மார்க்" பதிவுகளில் சேர்த்துக் கொண்டதனால் இந்நூலகத்தின் மத்தியமயமாக்கப்பட்ட பட்டியலாக்க சேவை முழுமையான பயனை அளிப்பதாகக் கருத இடமுண்டு.

3. பட்டியல் பதிவுகளைத் தயாரிக்கின்ற மத்திய நிறுவனத்திற்குப், புதிய வெளியீடுகள் பற்றிய தகவல்களை, அவை சம்பந்தப்பட்டவர்கள் உடனுக்குடன் அனுப்பிவைத்தல் அவசியமாகும். அநேகமாக இத்தகைய நிறுவனமானது தேசிய நூலகத்தைச் சார்ந்து விளங்குவதனாலும், அந்தந்த நாட்டு வெளியீடுகளின் பிரதிகள் இங்கு பாதுகாக்கப்படுவதனாலும் இவ்வெளியீடுகள் பற்றிய விபரத்தைத் தாமதமின்றிப் பெற வாய்ப்பாகின்றது.

4. இத்தகைய பட்டியலாக்க சேவையினைத் தொடர்ந்து திறம்படச் செய்வதற்குப் போதிய நிதி உதவி அவசியமாகும்.

5. சிக்கலானதும், இயந்திரமயமானதுமான ஒரு முறையைப் பயன்படுத்திப் பட்டியலாக்கப் பதிவுகள் அட்டைகள், நாடாக்கள் என்பனவற்றில் தயாரிக்கப்படுதல் பொருத்தமானதாகும்.

இத்தகைய அம்சங்களைக் கருத்திற் கொண்டு மத்தியமயமாக்கப்பட்ட பட்டியலாக்கத்தைத் தயாரிக்க முன்வரும் ஒரு நிறுவனமானது பதிவுகளை எத்தகைய வடிவில் தயாரித்து வழங்குவதென்பது பற்றியும் முடிவெடுத்தல் வேண்டும். பொதுவாக இத்தகைய நிறுவனங்களினால் பின்வரும் வடிவங்களில் இப் பதிவுகள் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன:-

1. <u>அட்டை வடிவம்:</u>

பட்டியற் பதிவுகளை அட்டைவடிவில் தயாரித்து, மத்திய நிறுவனமானது ஏனைய நூலகங்களுக்கு வழங்குகின்றது. அந்நூலகங்கள் முக்கியமாகச் சேர்க்கப்படவேண்டிய தகவல்களைச் சேர்த்தபின் பட்டியல் பேழைகளில் ஒழுங்குபடுத்துகின்றன. பிரித்தானிய தேசிய நூல்விபரப் பட்டியல் (BNB) அட்டைவடிவில் வழங்கப்பட்டமை; காங்கிரஸ் நூலகத்தின் அச்சிடப்பட்ட பட்டியல் அட்டைச்சேவை, W.H. வில்சன் கொம்பனியின் அச்சிடப்பட்ட பட்டியல் அட்டைச்சேவை என்பனவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

2. <u>தகவல் சேவை:</u>

விநியோகிக்கின்றது. அந்நூலகங்கள் இதிலிருந்து பதிவுகளை வெட்டி அட்டையில் ஒட்டிப் பட்டியலாகப் பயன்படுத்துகின்றன, அல்லது அந்நூல் விபரப்பட்டியலையே தமது பட்டியலாகப் பயன்படுத்தலாம். பிரித்தானிய தேசிய நூல்விபரப் பட்டியலின் அட்டைச்சேவை தொடங்கப்பட முதல் 1956ஆம் ஆண்டுவரையும் பிரித்தானிய தேசிய நூல்விபரப்பட்டியல் இம்முறையில் செயற்பட்டது.

3. நூல்களிலேயே பட்டியல் பதிவு: ( CATALOGUING IN SOURCE)

இது மத்திய மயமாக்கப்பட்ட பட்டியலாக்க நிறுவனத்தினதும் வெளியீட்டாளரினதும் கூட்டு முயற்சியாகும். வெளியீட்டாளரிடமிருந்து பட்டியலாக்கத்திற்கு வேண்டிய விபரங்களைப் பெற்று மத்திய மயமாக்கப்பட்ட பட்டியலாக்க நிறுவனமானது பட்டியற் பதிவுகளைத் தயாரித்து வழங்குகின்றது. இப்பதிவுகள் அந்தந்த நூலின் தலைப்புக்கு மறுபக்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும். 1958 - 59 ஆம் ஆண்டுகளில் காங்கிரஸ் நூலகம் 157 வெளியீட்டாளர்களிடமிருந்து இத்தகைய விபரங்களைப் பெற்றுப் பதிவுகளைத் தயாரித்து வழங்கியது. இது ஒரு பரீட்சார்த்த முயற்சியாகத் தொடங்கப்பட்ட வேலையாகும். இரு தரப்பினருக்கும் இத்திட்டம் திருப்தியளிக்காத படியால் கைவிடப்பட்டது.

ஆயினும் மீண்டும் 1971ஆம் ஆண்டிலிருந்து காங்கிரஸ் நூலகம் இச்சேவையினைப் புதுப்பித்தது. வெளியீடுகளில் பட்டியற்பதிவு (Cataloguing in Publication ) என்ற தலைப்பின்கீழ் பட்டியற் பதிவுகள் நூல்களில் அச்சிடப்பட்டன. பத்து வேலை நாட்களுக்குள் பதிவுகள் தயாரிக்கப்பட்டு வெளியீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டன. துணைத்தலைப்பு, வெளியீட்டு விபரம், பக்கங்கள் பற்றிய விபரம் தவிர ஏனைய பட்டியலாக்க முழு விபரமும் பதிவு செய்யப்பட்டு வெளியீட்டாளருக்கு அனுப்பப்பட்டன. இப்பதிவுகள் நூல்களில் வெளியிடப்பட்டதோடன்றி, இத்தரவுகள் காந்த நாடாக்களில் ( Magnetic tapes ) பதிவு செய்யப்பட்டும், பட்டியல் அட்டைகளில் பதிவு செய்யப்பட்டும் வெளியிடப்பட்டன. பிரித்தானிய நூலகத்தின் நூல்விபரப் பகுதியும் ( Bibliographic Division ) பிரித்தானிய வெளியீடுகளுக்கு இத்தகைய பதிவுகளைத் தயாரித்து வழங்கி வருகின்றது. இதே முறையில் இந்தியாவில் டாக்டர். எஸ். ஆர். அரங்கநாதனினால் Pre - Natal Cataloguing என்ற முறை அறிமுகப்படுத்தப்பட்டது. ஆயினும் இம்முயற்சி வெற்றியளிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இயந்திரமூலம் வாசிக்கக்கூடிய பட்டியலாக்கம் ( MARC ):

நூலகவியலின் பல்வேறுதுறைகளிலும் ஏற்பட்டு வருகின்ற வளர்ச்சி காரணமாகவும், நூலகங்களில் கணனியின் தாக்கத்தினாலும், மத்தியமயமாக்கப்பட்ட பட்டியற்பதிவுகளைத் தயாரிப்பதிலும் புதிய முறையை அறிமுகப்படுத்த வேண்டியதாயிற்று. இதனை ஏற்கனவே குறிப்பிட்டவாறு இயந்திரமூலம் வாசிக்கக்கூடிய

1966இல் ஆரம்பித்தது. ஆரம்பத்தில் 16 நூலகங்களுக்கு இத்தகைய பதிவுகள் வழங்கப்பட்டன. நூலகங்கள் இந்நாடாக்களை பெற்று கணனியின் உதவியுடன் வாசித்துத் தமக்கு வேண்டிய பதிவுகளைத் தயாரித்துக் கொள்ளக் கூடியதாகவுள்ளது. 1968இல் இத்திட்டம் இன்னும் நல்ல முறையில் செயற்படத் தொடங்கி MARC - II என்ற பெயருடன் ஏறக்குறைய ஐம்பது நூலகங்களுக்குச் சேவையை ஆரம்பித்தது. இந்நூலகங்கள் சந்தா செலுத்தித் தமக்குவேண்டிய நாடாக்களைப் பெற்றுக் கொண்டன. MARC - I சில குறிப்பிட்ட வரையறையுடையதாக இருந்தது. இந்நிலை தளர்த்தப்பட்டு MARC - II நெகிழ்ச்சித் தன்மையுடையதாக வெளியிடப்பட்டது. ஆங்கிலோ அமெரிக்க பட்டியலாக்க விதிமுறை-II இன்படி கொடுக்கப்பட வேண்டிய நூல் விவரணத்துடன் தூயிதசாம்சப் பகுப்பாக்க எண், காங்கிரஸ் நூலகப்பகுப்பாக்க எண், காங்கிரஸ் நூலக விடயத்தலையங்கம், விடய அட்டவணைப்பதிவு என்பனவற்றையும் கொண்டதாக இப்பதிவுகள் விளங்கின. இதே ஆண்டில் பிரித்தானிய தேசிய நூல் விபரப்பட்டியல் ( BNB ) பகுதி இயந்திரமூலம் வாசிக்கக்கூடிய பட்டியல் பதிவுகளைத் தயாரிக்கத் தொடங்கி; 1969இலிருந்து நூலகங்களுக்கு விநியோகித்தது. இது BNB/MARC என அழைக்கப்பட்டது.

பிரித்தானியாவின் இயந்திரமூலம் வாசிக்கக்கூடிய பதிவுகளைக் காங்கிரஸ் நூலகமானது பெற்று அதனையும் தனது "மார்க்" பதிவுகளில் சேர்த்துக்கொண்டது. படிப்படியாக இம்முறை உலகின் பல்வேறு நாடுகளிலும் பின்பற்றப்படுவதாயிற்று. அவுஸ்திரேலியா, கனடா, பிரான்சு, ஜேர்மனி, நெதர்லாந்து, யப்பான், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளும் "மார்க்" முறைப்படி பட்டியலாக்கம் செய்ய உடன்பட்டன. தற்போது நூலகவியலின் சகலதுறைகளிலும் "மார்க்" தனது தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. ஆவணங்களைத் தெரிவு செய்தல், பட்டியலாக்கம், தகவல்மீட்சி, நூல்விபரப் பட்டியல் தயாரிப்பு முதலியவற்றிலும், பல்வேறு நூலக வலய அமைப்புக்களிலும் "மார்க்" பயன்படுத்தப் பட்டு வருகிறது.

"மார்க்" முறையின் அமைப்பு சகல நாடுகளிலும் ஒரே மாதிரிப் பின்பற்றப்பட்டாலும், பட்டியலாக்க முறையில் நாடுகளிடையே வேறுபாடிருந்தமையினால், பொருளடக்க விபரங்கள், வேறுபடுவதாயின. இதனால் ஒரு நாட்டினது 'மார்க்' தரவு வேறொரு நாட்டினில் பின்பற்றப்படுவதாயின் அதற்கெனத் தனியாகக் கணனியின் செயல் முறையை எழுதவேண்டியதாயிற்று. இத்தகைய நிலையே 'UNIMARC' தோன்றுவதற்கு வழிவகுத்ததெனலாம். ஆயினும் எல்லா 'மார்க்' பாவனையாளர்களும் ஏற்கக்கூடிய முறையில் இதனை உருவாக்க முடியவில்லை.

UNIMARC - ஒரு தொடர்பு மாதிரியாகவே கருதப்பட்டது. இதன்படி ஒவ்வொரு நாடும் இருபரிமாற்றச் செயல் முறைகளைத் தயாரித்துப் பராமரிக்கக் கூடியதாக இருந்தது. குறிப்பிட்ட நாட்டிற்கு பயன்படுத்தும் முறையிலிருந்து UNIMARC க்கும் UNIMARC இலிருந்து ஒரு நாட்டிற்குரிய முறைக்குமாக இரு செயல் திட்டங்கள் தயாரித்தல் இன்றியமையாததாகின்றது.

அண்மைக் காலத்தில் காங்கிரஸ் நூலகம் தனது பதிவுகளை UNIMARC மாதிரி வடிவத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 1968இல் ஆரம்பிக்கப்பட்ட காங்கிரஸ் நூலக 'மார்க்' சேவையானது 1984இல் 1 3/4 மில்லியன் பதிவுகளை உள்ளடக்கியதாக இருந்தது. இது வருடாவருடம் 110 ஆயிரம் பதிவுகளினால் அதிகரித்து வருவதாயும் அறியப்படுகிறது. இந்நூலகத்தின் பட்டியல் விநியோகச் சேவைப் பகுதியினால் UNIMARC சேவை வழங்கப்படுகிறது.

இத்தகைய இயல்புகளைக் கொண்ட மத்தியமயமாக்கப்பட்ட பட்டியலாக்க சேவையினால் ஏற்படக்கூடிய பலாபலன்கள் பற்றியும் அறிந்துகொள்ளுதல் உகந்ததாகும்:-

1. ஒரே தன்மைத்தான வேலை பல நூலகங்களிலும் மேற்கொள்ளப்படுதல் தவிர்க்கப்படுகின்றது.
2. பட்டியற் பதிவுகளைத் தயாரிப்பதற்குரிய செலவீனம் மீதப்படுத்தப்படுகிறது.
3. பல்வேறு நூலகங்களின் பட்டியலாக்கத்தில் வேறுபாடுகள் தவிர்க்கப்பட்டு, ஒற்றுமைத் தன்மை நிலவுவதோடு, பட்டியலின் தராதரம் பேணப்படுகிறது.
4. இத்தகைய சேவையினைப் பெறும் நூலகங்கள் தமது வாசகருக்குச் சிறந்த சேவையினை வழங்க உதவியளிக்கிறது.
5. பட்டியலாக்க வேலையில் ஈடுபடும் அலுவலகத்து நேரம் மீதப்படுத்தப்பட்டு, அவர்கள் தமது நேரத்தை வேறு பயனுள்ள வேலைகளில் செலவு செய்ய வாய்ப்பளிக்கின்றது.
6. மத்தியமயமாக்கப்பட்ட பட்டியலாக்கமானது தேசிய நூல்விபரப் பட்டியலுக்கு அடிப்படையாக அமைகிறது.
7. அச்சிடப்பட்ட பட்டியற் பதிவுகள் நூற்சேகரிப்புப் பகுதியினருக்குப் புதிய நூல்கள் பற்றிய விபரங்களைக் கொடுத்துதவுகின்றது.
8. இதன் பயன்பாடு நூலகத்தோடு மட்டும் அமையாது, விஞ்ஞான நிறுவனத்தினர், தொழில்நுட்பத் தாபனத்தினர், வெளியீட்டாளர், நூல்விற்பனையாளர்கள் ஆராய்ச்சியாளர்கள் ஆகியோருக்கும் உதவுகின்றது.

இத்தகைய பயன்பாடுகள் மத்தியமயமாக்கப்பட்ட பட்டியலாக்கத்திலிருந்தாலும் ஓரிரு குறைபாடுகளும் இதில் இல்லாமலில்லை. பட்டியற்பதிவுகள் நூலிலேயே கிடைப்பதனால் அல்லது அட்டைகளையோ, காந்த நாடாக்களையோ பயன்படுத்துவதனால் பட்டியலாக்கத் தொழில்நுட்பத்திறமையினை வளர்த்துக்கொள்ளும் சந்தர்ப்பத்தினை நூலகர்கள படிப்படியாக இழந்துவிடக்கூடும்.

பயன்படும் என்பதில் ஐயமில்லை. இந்நாடுகளில் பயிற்றப்பட்ட நூலக அலுவலர்கள் பற்றாக்குறை, நிதிவசதியின்மை என்பன காரணமாக நூலகங்களிற் பட்டியலாக்க வேலைகளை விரைவுபடுத்த முடியாத சூழ்நிலை ஏற்படுதல் வழக்கமாகும். இத்தகு நூலகங்கள் மத்திய நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட பட்டியற் பதிவுகளைக் கொள்வனவு செய்து பயன்படுத்துவதன் மூலம் இத்தகைய நெருக்கடியினைக் குறைத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு நாட்டிலுமுள்ள தேசிய நூலகமானது மத்தியமயமாக்கப்பட்ட பட்டியலாக்க சேவையினை வழங்க முன்வருதல் வேண்டும். பிற நாட்டில் செயற்படுகின்ற மத்தியமயமாக்கப்பட்ட பட்டியலாக்க நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு பட்டியற் பதிவுகளைப் பெற்று, தமது நாட்டு நூலகங்களின் பொருளாதார தொழில்நுட்ப வசதிகளைக் கருத்திற் கொண்டு, பட்டியற்பதிவுகளை அட்டை வடிவிலோ, காந்தநாடாக்களாகவோ தயாரித்து, வழங்குவதன் மூலம் நாட்டின் சகல நூலகங்களும் சிறந்த முறையில் சேவையினை வழங்க வாய்ப்பாகிறது.

************


துணை நூல்கள்

1. HUNTER, E.J. Computerized Cataloguing, London: Clive Bingley, 1985.
2. KUMAR, Girja and KUMAR KRISHAN, Theory of Cataloguing, Delhi: Vikas Publishing House, 1975.
3. LANDAU, Thomas ed; Encyclopaedia of Librarianship. 3rd Rev. Ed. London: Bowes & Bowes, 1968.
4. NEEDHAM, C.D. Organizing Knowledge in Libraries, 2nd Rev. ed. London: Andre Deutsch, 1971.
5. Unesco Bulletin for Libraries, Vol. XXI, No:4, July - Aug. 1967.



சேவை. அயோத்தி நூலக சேவை. அயோத்தி நூலக சேவை. அயோத்தி நூலக

தங்கள் நூல்களை உரிய முறையில் பகுப்பாக்கம், பட்டியலாக்கம் செய்து கொள்ளவும் நூல்கள், சஞ்சிகைகளை மட்டை கட்டிப் பெற்றுக் கொள்ளவும் பெறுமதியான சஞ்சிகைத் தொகுதிகளில் இருந்து தகவல்களை இலகுவில் பெறும் வகையில் அவற்றிற்கு அட்டவணை ( I N D E X ) தயாரிக்கவும், அரிய நூல்கள், [illegible] இரவல் வழங்கல் மூலம் தொலையாமல் எளியதொரு நூல் இரவல் வழங்கும் முறையைத் தங்கள் நூலகத்திற்கு அறிமுகப்படுத்திக் கொள்ளவும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

நிர்வாக இயக்குனர், அயோத்தி நூலக சேவைகள், ஆனைக்கோட்டை

## எழுத்துக் கலையும் சாதனங்களும்

சி. முருகவேள், நூலகர்
யாழ். பல்கலைக்கழகம்

இடம், காலம் என்னும் இரண்டையும் விஞ்சி அமரத்துவம் பெற்று நிற்கின்ற ஆற்றலை மனிதனின் சிந்தனைகளுக்கு, பார்வைகளுக்கு அவன் அன்றாட வாழ்க்கையில் தேவைப்படக் கூடிய செய்திகளுக்குக் கொடுத்தது; எழுத்து என்னும் அற்புத சிருஷ்டியாகும். இதனை மனிதன் ஒரு கலையாக வளர்த்து வந்த வரலாறு சுவாரஸ்யமானது.

இந்தியா, சீனா முதலிய கீழைத்தேய நாடுகளில் எழுத்தின் வரலாறு நீண்ட ஒன்றாகும். இந்தியாவில் இதன் வரலாற்றைப் பண்டைய பள்ளத்தாக்கு நாகரீகங்களின் புலப்பாடாக விளங்கும், முத்திரைகளில், கல்வெட்டுக்களில் செப்புப் பட்டயங்களில் காண முடிகின்றது. இலக்கியங்களில் எழுத்துக்கலை வழக்கில் இருந்தமைக்குப் பல சான்றுகள் உள. காளிதாசனின் குமார சம்பவத்தில் காதலர்கள் தம் காதற் கடிதங்களைப் பூச்சரப் பட்டையில் எழுதுவதாக உள்ள கற்பனை நோக்கத்தக்கது. சிலப்பதிகாரத்தில் மாதவி கோவலனுக்குத் தாழம் மடலில் முகை என்ற எழுத்தாணியினால் செம்பஞ்சுக் குழம்பிலே தோய்த்துத் திருமுகம் வரைந்த செய்தியும் உண்டு. திருவிளையாடற் புராணத்தில் பாணபத்திரனுக்கு " உன் போல் என் மேல் அன்பு கொண்ட " சேரலனுக்கு எம்பெருமான் திருமுகம் வரைந்த வரலாறும் உள்ளது.

கீழைத் தேசங்களில் எழுத்துக்கலை எவ்வளவு புராதனமானதோ அவ்வளவு புராதனமானது மேலைத் தேசங்களிலுமாகும். மத்திய கிழக்குப் பிரதேசங்களில் செழித்து வளர்ந்த புராதன நாகரீக அழிபாடுகளில் எழுத்துக்கள் வரையப் பெற்ற மண் தகடுகள் கண்டெடுக்கப்பட்டன. புராதன கிரீசில் மரப் பலகையில் மெழுகு பூசி அதில் எழுதினார்கள். மேற்கத்தைய நாடுகளில் எழுத்துக் கலையின் வரலாற்றைத் தொடர்ச்சியாக அறிந்து கொள்வதற்கு ஏற்ற மூல சாதனங்களும், இலக்கியக் குறிப்புக்களும் உள்ளன.

எழுத்தினால் இயன்ற சாசனங்கள், ஆவணங்கள், பதிவுகள் முதலியன வற்றைச் சேகரித்துப் பேணிப் பாதுகாத்து வழங்க வேண்டியவர்கள் என்ற முறையிலே நூலகர்கள், ஆவணப் பாதுகாப்பாளர்கள் ( ARCHIVISTS ), எழுத்தின் வரலாற்றை அன்றி எழுதப்படுவ தற்குப் பயன்பட்ட சாதனங்கள் பற்றியும் எழுதப்பட்ட முறை பற்றியும் அறிந் திருப்பது அவசியமானது ஆகும்.

முதலில் மனிதன் கல்லில் உளியினால் எழுதினான். அசோகச் சக்கர வர்த்தி தன் அற்புதமான அற, தர்ம நியமங்களைக் கற்பாறைகளிற் பொறித்துத் தன் பிரஜைகளின் நன்மைக்காகத் தன் இராச்சியத்தின் பல மாவட்டங்களிலும் வைத்தமை நாம் அறிந்த வரலாற்றுச் செய்தி ஆகும். ஆதி மனிதர்கள் குகைகளிலே சுவர்களாய் இயல்பாகவே அமைந்த பாறை களில் வர்ண ஓவியங்கள் தீட்டிய செய்தியும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கல்லின் இயல்பு, உளிகளின் தன்மைகள் எவ்வளவுக்கு எழுத்துக்களின் இயல்புகளைப் பாதித்தன என்பது சுவையான ஆராய்ச்சிப் பொருளாகும். மொசப்பத்தோமியர் மண் தகடுகளில் கோலினால் எழுதினார்கள். இது மண் பச்சையாக இருக்கும் போது நிகழ்வது. பின்னர் தகடுகள் சுடப்படும். கிரேக்கர்கள் மெழுகுத் தகடுகளில் அன்றி பைப்பிரஸ் புல் தாள்களிலும் எழுதினர். பைப்பிரஸ் என்பது நைல் நதி ஓரத்தில் விளையும் நீண்டு வளர்கின்ற ஒரு வகையான புல். இவற்றை ஒன்றோடு ஒன்றாக இணைத்துத் தாள்களாகச் செய்தனர். இவற்றில் எழுத்து மையினால் எழுதப்பட்டது. இவ்வாறு எழுதப்பட்ட முறைகளின் (சுருள்களின்) சிதைவுகள் சில இப்பொழுதும் நூதன சாலைகளில் வைத்துப் பேணப்படுகின்றன. ஐரோப்பாவிலைச் சார்ந்த மத்திய கிழக்குப் பிரதேசமான பேர்கமம் ( PERGAMUM ) என்ற நாட்டு மன்னனுடன் ஏற்பட்ட தகராறின் காரணமாக எகிப்திய அரசு பைப்பிரஸ் புல்லின் ஏற்றுமதியைத் தடை செய்ததாக ஒரு மரபு உண்டு. அதன் காரணமாகவோ என்னவோ கிறிஸ்து சகாப்தத்தின் தொடக்கத்தில் பைப்பிரஸ் புல்லிற்குப் பதிலாக மிருகங்களின் தோல் எழுத்துச் சாதனமாக வழக்கில் வருவதாயிற்று. எழுத்துப் பாவனைக்கு வந்த தோலை ஆங்கிலத்தில் பார்ச்மென்ட் (PARCHMENT ) எனவும், வெலம் ( VELLUM ) எனவும் சொல்வார்கள். இரு சொற்களும் வேறு கருத்துடையன. எனினும் ஒரே கருத்துடையன போல வழங்கும். " பார்ச்மென்ட் " ஆட்டுத் தோலாகும். "வெலம்" மாட்டுக் கன்றுத் தோலாகும். மாட்டுத் தோலில் கருவில் உள்ள பிறக்காத கன்றின் தோல் மிகவும் சிறந்தது எனக் கருதப்பட்டது. தோல் எந்த வகையாக இருந்தாலும் முதலில் பதனிடப்பட்ட பதனிட்ட பிறகு எழுத்துக்கள் எழுதப்படும். இடைக் காலத்தில் ஐரோப்பாவில் இருந்த கிறிஸ்தவ மடாலயங்களில் இத்தகைய தோல்களில் பல நூல்களை எழுதினார்கள். இவ்வாறு எழுதுவது ஒரு தவச் செயலாகக் கருதப்பட்டது.

புராதன சீனாவிலும், இந்தியாவிலும் கல், மரப் பட்டைகள் பாவிக்கப்பட்டமை முன்னர் குறிப்பிடத்தக்கது. இவை தவிர சீனாவில் பட்டும், இந்தியாவிலும், இலங்கையிலும் ஏடுகளும் பாவிக்கப்பட்டு வந்துள்ளன. ( ஏடு - இதழ் ).

கடதாசி சீனாவிலே கண்டு பிடிக்கப்பட்டது. சேர். அவுரியல் ஸ்ரைன் என்பவர் மிகப் பழமை வாய்ந்த எழுதப் பெற்ற கடதாசித் துண்டுகளைச் சீனாவைச் சார்ந்த துருக்கிப் பகுதியில் கண்டெடுத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. அரேபியர் கடதாசியையும் அதன் பாவனையையும் ஐரோப்பா முழுவதற்கும் ஸ்பெயின் வரைக்கும் எடுத்துச் சென்றார்கள். ஐரோப்பியாவில் கிடைத்த மிகப் பழைய கடதாசிப் பத்திரம் 11ம் நூற்றாண்டிற்கு உரியதாகும். அதன் பின்னர் சிறிது சிறிதாகக் கடதாசி பெருவழக்கில் வரலாயிற்று.

## கலைத்திட்ட அபிவிருத்தியும் பாடசாலை நூலகங்களும்

கலாநிதி. பா. ஜெயராஜா
கல்வித்துறை
யாழ் பல்கலைக்கழகம்

இள இடைநிலைக் கலைத்திட்டத்திற் கணித அறிவினை விருத்தி செய்தல் நவீன உலகத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டதாக விளங்குகின்றது. கணிதம் என்பது அறிவியலின் அடிப்படை என்றும் அனைத்து அறிவுத் துறைகளினதும் அன்னையென்றுங் குறிப்பிடப்படும்.

இலங்கையின் கலைத்திட்ட வரலாற்றை நோக்கும் பொழுது 1972ஆம் ஆண்டு தொடக்கமே அனைத்துப் பாடசாலைகளிலும் அனைத்து மாணவர்க்கும் ஆறும் வகுப்புத் தொடக்கம் கணிதத்தைக் கற்பிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கு முன்னைய கால கட்டத்தில் எண்கணிதமே இத்தீவகம் எங்கும் பரவலாகக் கற்பிக்கப்பட்டு வந்தது. குடியேற்ற நாட்டுக் கல்வி முறைமையின் பிரிக்க முடியாத ஒரு பண்பாகவும் எண்கணிதம் விளங்கியது. எழுது வினைஞர் சேவைக்குச் செல்ல எண்கணிதமே பெருமளவு விரும்பப்பட்டது.

" அனைத்து மாணவருக்கும் கணித அடைவுகள் " என்ற நவீன கலைத்திட்ட இலக்குகளை நிறைவு செய்யும் பணியிலே பாடசாலை நூலகங்களும் பங்கு கொள்ள வேண்டியுள்ளன. பொதுவாக எமது பாடசாலைகளிலே ஒன்றிணைந்த கணிதம் தொடர்பான நூல்கள் மிக அரிதாகவே காணப்படுகின்றன. இந்நிலையிற் புதிய புதிய நூற் சேர்க்கைகளை மேற்கொள்ளும் பொழுது கணித நூல்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதை மீள வலியுறுத்த வேண்டியுள்ளது. கணித நூற் பிரிவிற் கணிதத்தோடு தொடர்புடைய கதைகள், கணித விளையாட்டுக்கள், கணிதப் புதிர்கள், கணிதப் படங்கள், பயிற்சிகள் போன்றவற்றை உள்ளடக்கிய நூல்களை இடம் பெறச் செய்து கணித அனுபவத்தின் ஒன்றிணைந்த பண்பு, வாழ்க்கைப் பயன், கற்பனை நயம் என்பவற்றைத் தொடர்புபடுத்த வேண்டியுள்ளது. நூல்கள் வாயிலாகக் கணிதச் சுவையினை வளர்க்கும் பொழுது கணிதங் கற்பித்தல் வினைத்திறன் கொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது.

கணிதமும் விஞ்ஞானமும் ஒன்றிணைந்தவை. இள இடைநிலைக் கட்டத்தில் அனைத்து மாணவர்க்கும் விஞ்ஞானக் கல்வியை வழங்கும் திட்டம் 1972ஆம் ஆண்டிலிருந்து விரிவுபடுத்தப்பட்டது. விஞ்ஞானக் கல்வி " பொது விஞ்ஞானம் " என்ற சாதாரண நிலையிலிருந்து மேம்பட்டதாய் அனுபவ அடிப்படைகளைக் கொண்டதாய், ஒன்றிணைந்த விஞ்ஞானமாக மலர்ச்சி கொண்டுள்ளது. அத்தகைய ஓர் அடித்தளத்திலிருந்து தான் பௌதீகவியல், இரசாயனவியல், உயிரியல் போன்ற சிறப்புத் துறைகளுக்குச் செல்ல வேண்டியுள்ளது. கலைத்திட்ட அபிவிருத்திக்குரிய பாடசாலை நூலக ஒழுங்கமைப்பு ஒன்றிணைந்த விஞ்ஞான அனுபவங்களைப் பயப்படுத்துவதாயும் அவற்றின் அடிப்படையிலே சிறப்புச் சேர்க்கை [illegible].

இச்சந்தர்ப்பத்திற் கணிதம், விஞ்ஞானம் போன்ற துறைகளிலே தமிழ் மொழி வாயிலான நூல்கள் போதியளவிலே இல்லாமை என்ற அறை கூவலையும், நூல்களைப் பெறுவதற்குரிய நிதியீட்டம் தொடர்பான நெருக்கடியினையும் எவ்வாறு எதிர் கொள்ள முடியும் என்ற நடப்பியலை நோக்க வேண்டியுள்ளது.

அண்மையில் யாழ் மாவட்டப் பாடசாலைகளில் நிகழ்ந்த கல்விக் கண்காட்சிகளிலே " இலக்கல் நூல்கள் " பிரதான கூறுகளாக இடம் பெற்றிருந்தன. இலக்கல் நூல்கள் என்பவை ஆசிரியரும் மாணவரும் ஒன்றிணைந்து தமக்குக் கிடைக்கப் பெற்ற சாதனங்களைப் பயன்படுத்தித் தயாரித்த நூல்களாகும்.

சூழலிற் கிடைக்கப் பெற்ற அட்டைகளையும், மட்டைகளையும் பெட்டித் தாள்களையும் பயன்படுத்தித் தாமே எழுதிய கையெழுத்துப் பிரதிகளை ஆசிரியரும் மாணவரும் இலக்கல் நூல்களாக்கியுள்ளனர். அவ்வப்போது நாளிதழ்களிலும், பருவ இதழ்களிலும் வெளி வந்த அறிவியற் கட்டுரைகளைத் தொகுத்தும் " இலக்கல் நூல்கள் " மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறான தொகுப்புக்களைப் பாடசாலை நூல் நிலையங்களிலே இடம் பெறச் செய்வதன் வாயிலாக நூலாக்கம் தொடர்பான வற்கடத்தினை நீக்க முடியும்.

இள இடைநிலைக் கலைத்திட்டத்தில் 1972 ஆம் ஆண்டிலிருந்து விருத்தி செய்யப் பெற்ற பாட அனுபவங்களிலே சமூகக் கல்வியும் சிறப்பிடம் பெறுகின்றது. இந்தப் புதிய அனுபவம் புவியியல், வரலாறு, குடி நிருவாகம், பொருளியல், சமூகவியல் போன்ற துறைகளிலிருந்து பெறப் பட்ட மூலக் கூறுகளை ஒன்று திரட்டித் தருவதாக விளங்குகின்றது. பாடங் களிடையே செயற்கையாக ஏற்படுத்தி வைக்கப்பட்ட பிளவுகளை நீக்கி அறிவுத் தொகுதியின் ஒன்றிணைப்பை மீள வலியுறுத்தும் நடவடிக்கையாகவும் சமூகக் கல்வி விளங்குகின்றது. மாணவன் வாழும் சூழலில் ஆரம்பமாகும் கல்வி படிப்படியாக ஆழ்ந்த பன்னறிவாக மாறுவதற்குரிய படிநிலைகளைச் சமூகக் கல்வி ஏற்படுத்த வேண்டியுள்ளது. சமூகக் கல்வியைப் பொறுத்த வரை இலக்கல் நூல்களே எமது பாடசாலைகளிற் பெருமளவிற் பயன்படுத் தப்பட வேண்டியுள்ளன. பாடசாலைச் சூழல் தொடர்பான கள ஆய்வு களும், செவ்விகளும் தொகுக்கப்பட்டு இலக்கல் நூல்களாக்கப்படல் வேண்டும்.

இள இடைநிலை மட்டத்தில் நயப்புணர்வுகளை வளர்ப்பதற்கு அழகிய லனுபவம் அமைக்கப்பட்டுள்ளது. ஓவியம், இசை, நடனம், முதலியவற்றைச் சுவைத்தல், பண்பாட்டை நாடும் பண்பாக மட்டுமன்றி வாழ்க்கையை நயக்கும் முழுமை நிறைந்த ஆளுமை வளர்ச்சிக்கும் அடிப்படையாக விளங்கும், அழகியலனுபவங்கள் படைப்பாற்றலுடனும் இணைந்தவை என்பதை மனங் கொள்ள வேண்டியுள்ளது.

அழகியலனுபவங்களை வழங்கத்தக்க நூல்கள் மட்டுமன்றி ஒலிப்பதிவுகள், ஓவியத் தொகுப்புக்கள், முதலியவற்றையும் பாடசாலை நூலகங்களிலே அமைத்துக் கலைத்திட்ட அபிவிருத்தியை விசைப்படுத்த வேண்டியுள்ளது. மாணவர்களும் ஆசிரியர்களும் வரைந்த ஓவியங்களைத் தொகுத்து ஒக்கல் நூலாக்கம் செய்வதோடு உலகப் புகழ் பெற்ற ஓவியங்களின் நிழற் பிரதிகளைப் பெற்றும் பாடசாலை நூலகத்தினை வளமுடையதாக்கல் வேண்டும்.

அகிலமெங்கும் பயன்படுத்தப்படும் இசைக் கருவிகளின் மாதிரிகைகள் பாடசாலை நூலகத்திற் காட்சிக்கு வைக்கப்படும் பொழுது மாணவரின் நயப்பு மேலும் தூண்டப்படும். இடைநிலை மட்டத்தில் மாதிரிகைகளின் நூலகம் அல்லது காட்டுருக்களின் நூலகம் என்ற பகுதியைக் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. மாதிரிகைகள் கற்றலனுபவங்களை விசைப்படுத்துகின்றன. செவி வழியாகப் பெறப்படும் அனுபவங்கள் கண் வழியாகப் பெறப்படும் அனுபவங்களால் மேலும் மேலும் முழு நிறைவாக்கப்படுகின்றன.

எமது பாடசாலைகளின் கற்பித்தலிற் குறிப்பு வழங்கல் என்ற செயல் முறையில் வழித் தொடர்புகளே பரக்கப்பயன்படுத்தப்படுகின்றன. பாடசாலை நூல் நிலையங்கள் வாயிலாகவே கண் வழித் தொடர்புகளை மேலும் மேலும் வளம்படுத்த வேண்டியுள்ளது.

இன இடைநிலைக் கலைத்திட்டம் தொழில் நுட்பக் கல்வியின்றி முழுமை பெற்று விட முடியாது. தொழில்களின் மாண்பினையறிதல், வாழ்க்கைத் திறன்களையறிதல், கைகள் வழியாக மனத்துக்குப் பயிற்சியளித்தல், உழைப்புப் பண்பாடு என்பதைக் கட்டியெழுப்பல் போன்ற இலக்குகள் தொழில் நுட்பக் கல்வியால் நிறைவேற்றி வைக்கப்படுகின்றன. இன இடைநிலை மட்டத்திலே தொழில் நுட்பக் கல்வி, வாழ்க்கைத் திறன் விருத்தி தொடர்பான நூல்கள் ஒப்பீட்டளவிற் குறைவாகவே காணப்படுகின்றன. வாழ்க்கைத்திறன் விருத்தியோடிணைந்த நலவியல், உடற் பயிற்சி, தொடர்பான கலைத்திட்ட அனுபவங்களை உள்ளடக்கிய நூல்களுடன் கருத்து விளக்கப்படங்களும் பாடசாலை நூலகத்திலே இடம் பெறுவதற்குரிய ஆக்கம் வேண்டப்படுகின்றது. " பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சிக்குரிய நூலகச் சூழல் " இடைநிலைப் பாடசாலை மட்டத்திற் கட்டியெழுப்பப்பட வேண்டியுள்ளது. ஆளுமை வளர்ச்சிக்குரிய நூலகச் சூழல் என்ற கருதுகோள் பல்துறையாக்கங்களின் ஒன்றிணைப்பாக மலர்ச்சி கொள்ள வேண்டியுள்ளது.

இடைநிலைப் பாடசாலைக் கலைத்திட்டத்துக்குரிய நூலக அனுபவங்களை ஆராயும் பொழுது சமூக, பொருளாதாரக் காரணிகளைத் தொடர்புபடுத்துதல் அடிப்படையானதும் இன்றியமையாததுமாகும். வறிதாகிய வாழ்க்கை நிலையிலிருந்து பாடசாலைக் கல்வியைத் தொடர முடியாது வெளிநீங்கும் மாணவர்களும், போட்டியை நடுநாயகமாகக் கொண்ட சூழலிலே பின்தங்கி விடும் மாணவர்களும் பாரா முகமாக விடப்படுதலுண்டு.

மேற் கூறிய அறை கூவல்களை எதிர் கொள்ளும் செயற்பாடுகளில் நூலகர் பணியும் ஒன்றெனக் கருதப்படுகின்றது. நூலக அனுபவங்கள் வாயிலாக ஒரு மாணவர் தாமே முயன்று கற்கும் ஆற்றலை வளம் மிக்குடையதாக்குவதற்குத் துணை நிற்பதனால் பாடசாலை நூலகங்களின் ஆக்கத்திற் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

பாடசாலைக் கல்வியைத் தொடர முடியாதவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் கல்வியை வழங்கும் ஏற்பாடுகள் இன்று வளர்ச்சியுறத் தொடங்கியுள்ளன. சோவியத் நாட்டில் இப்பணி " மக்கள் பல்கலைக்கழகங்கள் " என்ற அமைப்புகள் வாயிலாக நிறைவேற்றி வைக்கப்படுகின்றன. இங்கிலாந்து, இலங்கை போன்ற நாடுகளில் இந்த இலட்சியம் திறந்த பல்கலைக் கழகங்களிடம் விடப்பட்டுள்ளன. எவ்வித புகுமுகத் தேர்வுமின்றி ஒருவர் திறந்த பல்கலைக்கழகத்திலே சேர்ந்து கற்க முடியும். இவ்வாறான தொடர் கல்விக்குரிய அடித்தளம் இடைநிலை மட்டத்திலே கட்டியெழுப்பப் படுவதை மனம் கொள்ளும் பொழுது அத்தகைய நோக்கத்தில் நூலகங்களின் செயற்பாடுகள் விதந்து குறிப்பிடப்பட வேண்டியுள்ளன.

" கற்றல் " என்பது ஒரு பொறி முறையான செயற்பாடன்று. மாணவருக்கு வழங்கப் பெறும் பல்வகை அனுபவ ஒழுங்கமைப்புக்களிலிருந்து அது முகிழ்த்தெழுகின்றது. அந்நிலையிற் பாடசாலை நூலகர் வசதிகள் வழங்குநராக, ஆலோசகராக உற்சாகமூட்டுபவராக நலனுய்வாளராக விளங்க வேண்டியுள்ளார். கலைத்திட்டத்தை வளம்படுத்தும் பாடசாலை நூலகம் மாணவரின் உற்சாகத்தைத் தூண்டக் கூடியதாக செயற்பாடு கொண்டதாகத் தான் வேறு, நூலகம் வேறு என்று மாணவர் கருதும் அந்நியமாதல் அற்றதாக அமைக்கப்படல் வேண்டும். மாணவரின் வயது வேறுபாடுகளோ, வகுப்பு வேறுபாடுகளோ, அந்தஸ்து வேறுபாடுகளோ, நூலக அனுபவங்களில் எவ்வாறான முன்னுரிமைகளையும் வழங்குபவையாய் இருத்தலாகாது.

இடைநிலைப் பாடசாலைக் கலைத்திட்டத்துக்குரிய நூலகம் என்பது பல்வேறு பண்புக் கூறுகளின் ஒன்றிணைப்பதாக அதாவது ஒரு கலையகமாக, தொல்பொருட் காட்சிக் கூடமாக கலாபவனமாக, கண்காட்சி மண்டபமாக அரங்கமாகத் திகழ வேண்டியுள்ளது.

இச்சந்தர்ப்பத்திற் சில மாணவர்களிடத்து நிபந்தனைப்பாடுகளால் வளர்த்தெடுக்கப்படுகின்ற " மோகமும் வெறுப்பும் " என்ற தோற்றப்பாட்டினைப் பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது. சில பாடங்கள் மீதும், பாடப் பகுதிகள் மீதும் அளவிறந்த பிரியமும் உற்சாகமும் ஏற்படுகின்ற வேளை சில பாடப் பரப்புக்கள் மீது மாணவர்க்கு வெறுப்புணர்ச்சி தோன்றுதலுண்டு. "மோகமும் வெறுப்பும் " என்ற மனோபாவத்தை "மோகமும் மோகமும் " என்ற ஒத்திசைவாக வளர்த்தெடுக்க வேண்டியுள்ளது. பாடங்கள் மீது வெறுப்பை ஏற்படுத்துகின்ற நிபந்தனைகளை மாற்றியமைத்துச் சமச்சீரான வளர்ச்சியை நிறைவு செய்யும் பணியிலே நூலகம் பங்கு கொள்ள வேண்டும்.

அண்மைக் காலத்தைய மேலைப்புலத்துப் பாடசாலைக் கலைத் திட்டம் பற்றி ஆராய்வோர் " பண்பாட்டு நெருக்கிடைகள் " என்ற பொருள் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். அவற்றுட் சிறப்பாக "இளைஞர் பண்பாடு " என்ற எண்ணக் கருவைப் பற்றி விரிந்து பேசியுள்ளனர். பாரம்பரிய விழுமியங்களோடு முரண்படுதல், கட்டற்ற குழுக்களாக இயங்குதல், போதைப் பொருள்கள் நுகர்தல், வெறு சமைக் கேளிக்கைகளில் ஈடுபடல், என்ற பண்புகள் இளைஞர் பண்பாட்டுடன் இணைந்தவையாகக் கூறப்படுகின்றன. இவ்வாறான கோலங்களுக்குரிய பொறுப்பினைக் கல்வி முறையின் மீது சுமத்தி விட முடியாது. சமூக பொருளாதார அடிக்கட்டுமானத்துடன் இளைஞர் பண்பாடு கொண்டுள்ள இணைப்பை அறிவு பூர்வமாகத் துலக்கி வைக்க வேண்டியுள்ளது. அறிவைத் துலக்கும் செயற்பாட்டில் பாடசாலை நூலகத்தின் பணி நிதானமாகத் திட்டமிடப்பட வேண்டியுள்ளது.

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

## புது நூல்கள்

********

### ஆண்டு மலர்

*******

1. தமிழோசை/ (பதிப்பு) பொ. செங்கதிர்ச்செல்வன் .- திருநெல்வேலி : யாழ் பல்கலைக்கழகத் தமிழ் மன்றம், 1986 .- 11 ப.

### கல்வி

***

2. பாலர் கல்வியும் விஞ்ஞான அணுகு முறையும்/(தொகுப்பு) பாலர் கல்விக் கழகம் .- யாழ்ப்பாணம் : இ. இரத்தினகோபால், செயலாளர், யாழ் பாலர் கல்விக் கழகம், 1986.- 170 ப., ரூபா. 25/- (பதினைந்து அத்தியாயங்களில் பாலர் கல்வி தொடர்பான பல்வேறு அறிஞர்களின் கட்டுரைத் தொகுப்பு )

### நூலகவியல்

*******

3. பாக்கியநாதன், வே. இ. / நூற் பகுப்பாக்கம் நூலகர்களுக்கான கைநூல் .- ஆனைக்கோட்டை : அயோத்தி நூலக சேவைகள், யூலை, 1986 .- 210பக்., ரூபா 15/- ( தூவி தசாம்சப் பகுப்பு முறையின் அறிமுகமும் பகுப்பிலக்கங்களும் அடங்கியுள்ளன. நடுத்தர நூலகங்களில் நூற் பகுப்பில் ஈடுபடுபவர்களுக்கேற்றது )

* * * * *